# விக்கினேஸ்வரம்



VIGNESWARA COLLEGE
TRUTH TRIUMPHS
KARAVEDDY

Sri Muthumari Amman Temple
180-186 Upper Tooting Road
Tooting
London SW17 7ER

Oct 24
2009

விக்னேஸ்வரா பழைய மாணவர் சங்கம்
பிரித்தானியா

# Letzmove Property Ltd

*... let us work for you*

## Lettings

### Looking to Rent

We have large selection of properties available to Rent in Following areas:

Tooting - Mitcham - Collierswood

Malden - Streathem - Croydon - etc.

## Landlords

Lower Commission

Best Rent Achieved

Free Valuation - No Obligation

Professional Tenants

Tenants Referencing

Inventory Prepared

## Sales

Lower Commission

Advert on Web & Papers



புதிய பரிமாணத்துடன்
சிறந்த சேவையாற்ற...

**RESIDENTIAL & COMMERCIAL ▶ SALES ▶ LETTINGS ▶ MANAGEMENT**

182 Mitcham Road, Tooting, London SW17 9NJ Tel: 020 8767 5800 Fax: 020 8696 1900

Email: info@letzmoveproperty.co.uk Web: www.letzmoveproperty.co.uk

## கல்லூரிக் கீதம்

**பல்லவி**

வாழ்கவே வளர்க வாழ்கவே - வளரும்
விக்னேஸ்வரா வாழ்கவே வாழ்கவே வாழ்கவே.

**சரணம்**

கலைகள், விஞ்ஞானம், கவினுடன் இங்கே
கற்றெழில் பூண்டிடுவோம்.
இலை மறை காயாய் விளங்கும் சிறார்கள்
இலங்கிடக் கண்டிடுவோம்.
(வாழ்கவே)

ஆங்கிலம் , தமிழ் மொழி அழகிய முறையில்
ஆய்ந்து நாம் கற்றிடுவோம்.
தேங்கிய புகழ்தன் ஊற்றிடமாக
திறன் பணி கண்டிடுவோம்.
(வாழ்கவே)

வர்த்தகவியலும் தொழில் முறைக் கல்வி
வளர்த்திட முயன்றிடுவோம்.
நற்தனம், இசைகள், நாடகம் என்பவை
நாளும் பயின்றிடுவோம்
(வாழ்கவே)

எண்ணொடு எழுத்து என்பவை இரண்டும்
எம்முயிர் என்றிடுவோம்.
விண்ணக இன்பம் மண்ணிணிற் கல்வி
என்றதைக் கூறிடுவோம்.
(வாழ்கவே)

# தலைவரின் வாழ்த்துச் செய்தி

யா/கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் பிரித்தானியாக் கிளை வருடாந்தம் வெளியிடும் விக்னேஸ்வரம் சஞ்சிகைக்கு செய்தி வழங்குவதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.

இலங்கையில் தமிழ் மக்களின் எதிர்கால வாழ்வு கேள்விக்குறியாகி நிற்கும் இவ் வேளையில் பிரித்தானியா வாழ் பழைய மாணவர்களும், கல்லூரியின் நலன் விரும்பிகளும் ஒன்று கூடி தமது சக்திக்கு உட்பட்ட வகையில் கல்லூரி சார்ந்த மாணவர்களின் எதிர்கால வாழ்வுக்கு உதவ முன்வந்தது குறித்து நன்றி கூற கடமைப்பட்டுள்ளேன்.

இவ் நல்ல முயற்சி தொடர வேண்டும் என்று கூறி உங்களிடம் இருந்து விடைபெறுகின்றேன்.

நன்றி

அன்புடன்

வே. லீலாரத்தினம்.

# கல்லூரி அதிபர் ஆசிச்செய்தி

அன்பின் பழைய மாணவர்களே இம்மடல் மூலம் தங்களுடன் தொடர்பு கொள்வதில் மகிழ்ச்சியும் பெருமிதமும் அடைகின்றேன். அதற்காக உழைக்கும் இலண்டன் பழைய மாணவர் சங்கத்தினை பாராட்டுகின்றேன்.புலம் பெயர்ந்த நிலையிலும் தம்மை வளர்த்து எடுத்த கல்லூரி மாதாவினை மறக்காது அதன் தற்போதைய புதல்வர்களின் வளர்ச்சிக்கு தாங்கள் எடுக்கும் அர்ப்பணிப்பு நிறைந்த அரிய பணிக்கு வாழ்த்துக்கள். இந்நிலையில் கல்லூரியில் தற்போதைய நிலை தொடர்பாக முக்கிய சில விடயங்களை தங்கள் நினைவுக்கு சமர்ப்பிக்கின்றேன்.

1. 2009 முதல் கல்லூரி - இசுறு- பாடசாலையாக தரமுயர்த்தப்பட்டு தரம் 6 - 13 வரையிலான வகுப்புக்கள் கொண்டதாக மாற்றப்பட்டுள்ளது.
2. ஆரம்பப் பிரிவு - விக்னேஸ்வர ஆரம்பப் பாடசாலை எனும் பெயரில் தெற்குப் புறமாக உள்ள "கணக்காளர் வேலாயுதம்" வீட்டில் இயங்க உள்ளது. (2010 முதல்) அதற்கு பொறுப்பாக வேறு ஒரு அதிபர் இருப்பார்.
3. தற்போது 962 மாணவர்களுடன் 48 நிரந்தர ஆசிரியர்களையும் 06 தற்காலிக இணைப்பு ஆசிரியர்களையும் கொண்டு இயங்குகிறது.
4. இவ்வருடம் பல்கலைக்கழகம் 21 மாணவர்கள் புகுகின்றனர்.
5. கல்லூரி மாணவர் தொகை மேலும் அதிகரிக்க அயல் பாடசாலைகளின் ஒத்துழைப்பு திருப்திகரமானதாக இருப்பினும் இது மேலும் உயர்த்தப்படல் வேண்டும்.
6. விளையாட்டுத் துறையில் முன்னேற்றம் இருந்தாலும் விளையாட்டுத் துறை மேலும் ஊக்குவிக்கப்படவேண்டியுள்ளது.
7. அண்மையில் 'சர்வதேச ஆசிரியர்தின விழா' கொண்டாட்டம் கல்லூாயில் நடைபெற்றது. "கலாநிதி ஆறுமுகம் கேதீஸ்வரன் அவர்கள் கலந்து சிறப்பித்ததும் பழைய மாணவர்களாக ஆசிரியர் திரு.பி. சின்னத்தம்பி, பலாலி பயிற்சி கலாநிதி ஆசிரியர் திரு.வி. கந்தசாமி அவர்கள் கலந்து பழைய நினைவுகளை மீட்டனர்.
8. மாணவர்களின் ஆங்கிலக் கல்வியை வளர்த்து எடுக்க ஓய்வுபெற்ற ஒருவரை ஆங்கில ஆசிரியராக நியமித்து கனடாவை சேர்ந்த திரு.எஸ்.சத்தியமூர்த்தி அவர்கள் உதவி செய்து வருவது மனநிம்மதியை தருகிறது.

## நாம் வேண்டுவது

1. கல்லூரிக்கு என கணக்காளர் வேலாயுதம் அவர்களின் வீட்டுடன் இணைந்த காணி கொள்வனவு செய்யப்பட்டு சுற்றுமதில் இடப்பட வேண்டும்.
2. கல்லூரி விளையாட்டுத் துறையினை வளர்க்க உதைப்பந்து விளையாட்டில் பங்கு கொள்ளும் மாணவிகட்கு பூட்ஸ் வழங்க உதவ வேண்டும்.
3. கல்லூரி ஆண்கள் பான்ட் வாத்திய அணிக்கும், பெண்கள் பான்ட் வாத்திய அணிக்கும் பான்ட் சீருடை தைக்க உதவ வேண்டும்.
4. கல்லூரியில் கற்கும் 20 வறிய மாணவர்கள் கல்வியினை தொடர ஒரு மாணவனுக்கு மாதாந்த Tution காசாக ரூபா500 செலுத்த பழைய மாணவர்கள் ஒவ்வொருவர் ஒருவரை பொறுப்பு ஏற்று உதவ வேண்டும்.
5. கல்லூரி கணணி கூடத்தை மாணவர் சிறப்பாக பயன்படுத்த உதவுமுகமாக கல்லூரி பழைய மாணவர் ஒருவரை நியமிக்க மாதாந்தம் அவருக்கு உதவுதொகையினை கொடுக்க எமக்கு உதவ வேண்டும் என வேண்டுகின்றோம்.

இறுதியாக உங்களிடம் வேண்டப்படுவது எமது பாடசாலை சமூகத்தின் பாரிய ஒத்துழைப்பு, பங்களிப்பு நிகழ உங்களிடமிருந்து உதவுவது போன்று அவர்களும் மனந்தளராது தீர்க்கமான தொலைநோக்கு சிந்தனையுடன் உதவவேண்டும் என அனைவரையும் வேண்டி நிற்கிறோம்.

விக்னேஸ்வராதான் கரவெட்டி, கரவெட்டிதான் விக்னேஸ்வராஇது நிலவப்படல் வேண்டும்.

விழா வெற்றி பெற எம்மலரில் வாழ்த்துக்கள் தெரிவித்து தீபாவளி வாழ்த்துக்களையும் தெரிவித்து விடைபெறுகின்றேன்

நன்றி.

**அதிபர் திரு.வே.சிவசிதம்பரம்**

# கல்விக்கொரு கற்பக தரு கரவை விக்னேஸ்வரா

"பெற்ற தாய், பிறந்த பொன்னாடும், கற்ற கல்லூரி, கலைதரு ஆசான்கள்;" என்பன நெஞ்சத்தில் என்றும் நிலைத்து நிற்கும் நினைவுப் பொக்கிஸங்கள். புண்ணியம் கோடி ஒருவனுக்கு எழுத்தறிவித்தல் ஆகும். உண்மைக்கும் பொய்மைக்கும் இடையேயான மயக்கம் நிறைந்த இந்த வாழ்வியலில் உண்மையை தேடிப்பிடிக்க உதவுவது கல்விப்பேறே ஆகும். இப்பெரும் பேற்றினை கடந்த தொண்ணூற்று இரண்டு ஆண்டுகளாக விக்னேஸ்வரா பாரியென வாரிவழங்கி வருகின்றது. எமது கல்லூரி மாணவர்களிற்கு புத்தகத்தை மாத்திரம் போதிக்காமல் மாணவர்களை பண்பும் பயனுமுள்ளவர்களாக்கி, சமூக நல்வாழ்விற்கும் மேம்பாட்டிற்குமாக மிகவும் அடக்கமான சூழ்நிலையில் இடையூறற்ற பணியை ஆற்றி வருகின்றது.

இவ்வாலயத்திலே எண்ணும் எழுத்தும் அறிவித்த ஆசிரியர்கள் பலர். எங்கள் மனதில் இன்றும் இவர்கள் குருதெய்வமாக இருக்கின்றார்கள். நம்மை நல்வழிப்படுத்தி நன்கு வாழ வைக்கும் பெருமையும் இவர்களிற்குரியதாகும்.கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம், தமிழ், இலக்கியம், முதலிய பாடங்கட்கு பெயர்பெற்ற ஆசிரியர்கள் சிறப்பாக கற்பித்து புகழ்பூக்க வைத்த காலங்கள்-பல. அவ்வாசிரியர்களும், அவர்களது சேவைகளும் ஞாபகத்தில் வரும் போது கரவை விக்னேஸ்வராக்கல்லூரி என்ற உணர்வும் ஓர் அன்னியோன்யமான பாசமுமே வளர்கிறது.

பனை, வடலி வளவிலே கிடுகுக் கொட்டிலாகவே அமைக்கப்பெற்ற அக் கல்லூரி இன்று சகல துறைகளிலும் பல சாதனைகளை நிலைநாட்டி பெரியதோர் அறிவாலயமாக மிளிர்கின்றது. தொழிற்கூடம், மனையியற் கூடம், விஞ்ஞானகூடம், கவின்கலைக்கூடம், கணனிகூடம் முதலிய பல கலைக்கூடங்களையும் கொண்டு பெரியதோர் கல்லூரியாக வளர்ச்சியடைந்து விட்டது. கல்லூரி வளவுமோ விசாலமாகி வனப்பு மிக்கதாகி விட்டது. இதனுடைய வளர்ச்சிக்கு ஸ்தாபகர் சித்த மணியக்காரன் தொடக்கம் அவருடைய சந்ததியினர், பல பெரியார்கள், கல்வி மான்கள், நிர்வாகிகள், கல்லூரி நலன் விரும்பிகள் என்பவர்கள் பொருட்தானம், அருட்தானம், சிரமதானம், நிதித்தானம், என்பன செய்துள்ளார்கள். இவர்களது சேவை அளப்பெரியது. மதிப்பிட முடியாதது. இவர்களது சேவை பற்றிக்கூற பாரதியாரின் :

"இன்னறுங்கனிச் சோலைகள் செய்தல்
இனிய நீர்த்தன் சுனைகள் இயற்றல்
அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல்
ஆலயம் பதினாறாயிரம் நாட்டல்
பின்னருள்ள தருமங்கள் யாவும்
பெயர் விளங்கி யொளிர நிறுவுதல்
அன்ன யாவினும் புண்ணியம் கோடி
ஆங்கோர் ஏழைக் கெழுத்தறிவித்தல்"

என்ற பாரதியாரின் அடிகளே என் மனதில் வருகின்றது. பதிலுபகாரம் எதிர்பாராது இப்பெரியார்களின் சேவை போற்றி பாராட்டுதற்குரியதே. நயனொரு நன்றி புரிந்த பயனுடையார் பண்பும் பாராட்டுதற்குரியதே.அந்நிய ஏகாபத்திய ஆட்சிக்காலத்தில் எமது சுதேசியப் பண்பாடும். சுதேசிய மதங்களும் புறக்கணிக்கப்பட்ட நிலையில் எமது பண்பாட்டையும் எமது மதத்தையும் பேணிப்பாதுகாக்க முற்பட்டவர்கள் பலர். இவர்களில் கரவைச் சிற்றம்பல முதலியாரும் அவரது வழித் தோன்றல்களும் எமது மண்ணில் முதன்மையிடம் பெறுகிறார்கள் என்றால் மிகையாகாது. அவர் தமிழுடன் இணைந்து ஆங்கில கல்வியும் ஓங்கி வளர வேண்டும் என்ற பேராவலுடன்

விக்னேஸ்வராக்கல்லூரிக்கு கால்கோல் கொண்டமை என்றும் எவராலும் போற்றுதற்குரியதே. கற்றாரை கற்றாரே காமுறுவர் என்பது போல் இவரது மைத்துனர் சின்னத்தம்பி முதலியார் கரவையிலும் அதன் அயல் கிராமங்களிலும் பெருமளவான மாணவர்கள் பயன்பெற வேண்டுமென இக்கல்லூரியை தொடர்ந்து நடத்தி வந்தார்.

சிறு குடிலாக அமைக்கப்பட்ட இப் பாடசாலை பெருங்குடிலாக பெருமை பொருந்திய நிரந்தரக் கட்டிடமாக அமைந்த போது பெருமைக்குரிய முன்னைநாள் அரசாங்க அதிபர் பி.எஸ்.கோஸ்பேக் 6.10.1917ல் அதனைக்கலாலயமாக திறந்து வைக்கும் பெரும்பேறு பெற்றார். இதன் பின்னர் வடமராட்சி பகுதியில் மட்டுமன்றி தேசிய மட்டத்திலேயே பிரபல்யம் வாய்ந்த பாடசாலையாக திகழ்ந்தமை யாவரும் அறிந்த உண்மை. யாழ்ப்பாணத்துப் பழைமைவாய்ந்த நிலப்பிரபுத்துவ முறைகளின் கொடுமைகளை ஒழித்துச் சமூக மேம்பாட்டிற்கான முன்னோடி நடவடிக்கைகளை ஆரம்பித்து வைத்த பெருமை இப்பாடசாலைக்கும் தாபகரிற்குமே சாலப் பொருந்தும்.

ஆங்கிலேயர் ஆட்சியால் ஓங்கி வளர்ந்த கிறிஸ்தவக் கல்லூரிகளுடன் சரிநிகர் சமனாக நின்று ஆங்கிலக் கல்வியையும் சைவத்தமிழ்க்கல்வியையும் வளர்த்து தமிழர் பண்பாட்டு பாரம்பரியத்தை பேணியது பெருமைக்குரியது. அயலூர்களில் முற்றுகையிட்ட கிறிஸ்தவத்தை தன்னூரில் அதிகம் நெருங்க விடாது-ஆக்கிரமிக்க விடாது தடுத்த பெருமை இக்கல்லூரிக்கே உரியது. சமூக கலாச்சாரப் பாரம்பரியங்களை பேணுகின்ற மிடுக்குடன் பலகிராமங்களின் மத்தியில் தலைநிமிர்ந்து நிற்கின்ற இக்கல்லூரி நகரக் கல்லூரிகளிற்கு சமனான மாணவச் செல்வங்களை வளர்ப்பதில் பெருமை கண்டது. ஒரு தாயால் ஒரு குழந்தையை தன்னிலும் நன்றாக உருவாக்க முடியாத இன்றைய காலகட்டத்திலே தன்னை நாடி வந்த தன் செல்வர்களை நன்றாக உருவாக்கிய பெருமை விக்னேஸ்வரா மாதா செய்த பெருந்தவம் என்று தான் கூறவேண்டும்.

பொறியியலாலர்கள், மருத்துவர்கள், சட்டவல்லுனர்கள், கலைஞர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள், விரிவுரையாளர்கள் தொடர்ந்து எம் நாட்டில் திரு.பொன் கந்தையா, திரு.மு.சிவசிதம்பரம், திரு.க.ஜெயக்கொடி ஆகிய உயர்ந்த அரசியல் தலைவர்கள் விக்னேஸ்வராக்கல்லூரி வளர்த்தெடுத்த சிற்பிகள். விக்னேஸ்வராக்கல்லூரியின் விழுதுகள். இவர்களின் வாழ்வு விக்னேஸ்வராக்கல்லூரியின் பெருவாழ்வு இதன் மூலம் இக்கல்லூரியின் ஆளுமையும் அணுகுமுறையும் புலப்படுத்தப்படுகின்றது. மேலும் கல்லூரி நிர்வாகமும், சமூகமும் நெருங்கிய உறவைக்கொண்டிருப்பது கல்லூரியின் வருங்கால வளர்ச்சியையும் எடுத்துரைக்கின்றது. சைவமும் தமிழும் கலந்த கலாலயமாக காலூன்றிய இக்கல்லூரி" கற்றோர் மிகுந்த கரவை" எனக் கணிக்கப்பட தளமாகத் திகழ்கின்றது. கிராமப்புறக்குழந்தைகள் நகர்புற பாடசாலைகளை நோக்கி ஓடாது இப்பாடசாலையையே நாடிவரச் செய்த பெருமை மேற்படி ஆசிரியர்களையும் அதிபர்களையுமே சாரும். கற்கின்ற மாணவர்கள் எவ்வித குறையுமின்றி கல்வி கற்கவேண்டும் என்பதற்காக சகல வசதிகளையும் காலாகாலமாக நல்கிவரும் முன்னைநாள் முகாமையாளர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், தொழிலதிபர்கள் மற்றும் நலன்விரும்பிகளும் பாராட்டப்படவேண்டியவர்களே. இவர்கள் இக்கல்லூரி வளர்ச்சிக்காகவும், உயர்ச்சிக்காகவும் அயராது உழைப்பவர்கள்.

"கற்றதனாலய பயனென்கொல் வாலறிவான்

நற்றாள் தொழார் எனின்"

என்னும் பொதுமறைக்கிணங்க தொழுவதற்கென ஆலயங்கள் தோற்றம் பெற்றன. இவற்றில் ஒன்று கரவை வெல்லன விநாயகர் ஆலயம், மற்றையது தச்சை சிந்தாமணி விநாயகர் ஆலயம். ஆலயங்களும் பாடசாலைகளும் சைவசமய பண்பாட்டினை வளர்ப்பதில் முன்னின்று உழைப்பவை. விக்னேஸ்வரக்கல்லூரி தனக்கென பல வளங்களையும், பெருமைகளையும் தேடிக் கொண்டு இப்போது வீறுநடை போடுகின்றது. உயர்கல்வி கற்று உய்வும் தேடித்தருகின்றது. ஆங்கிலம், தமிழ் மட்டுமின்றி சைவம் விளக்கும் வடமொழியும் அன்று கற்பிக்கப்பட்டது. அதனால்

மெய்ஞானக்கல்வி தளிர்விட்டு ஓங்கியது. பாடசாலை ஆரம்பிக்கும்போதும் முடிவுறும்போதும் திருமுறைகள் ஓதப்பட்டன.

கல்விக்கு திருநீற்றை மறந்து ஒளி இழக்கவேண்டிய நெற்றிகள் ஒளிபெற்றன. வற்றாத அருள்சுரக்கும் வள்ளல்களும், ஆசான்களும் வாழ்ந்து காட்டி வாழ்வளித்தனர். வெள்ளி, செவ்வாய் விக்னேஸ்வரா மாணவர்களுக்கு குதூகலம். சைவசிந்தனைகள் அவர்கள் சிந்தனைகளாகின. தெய்வம் என்பதோர் சித்தம் உண்டாகி முடிவில்லா பொருளைத் தேடி ஆலயம் அடைந்தனர். "தேடிக்கண்டு" ஆனந்த தேன் பருகினர். இவ்விரு ஆலய பெருவிழாக்காலங்களிலும் விக்னேஸ்வராக் கல்லூரி மாணவர்களது தொண்டு அளவிடப்பட முடியாதது. இறைபணி செய்ய இவர்கள் வெட்கப்படுவதில்லை. பின்னிற்பதில்லை. இது "என் கடன் பணி செய்து கிடப்பதே" என்னும் மனோபாவத்தை பெற உதவியது.

விக்னேஸ்வராக்கல்லூரி ஈன்றெடுத்த மக்கள் உயர் உத்தியோகங்களில் உள்ளனர் என்பது யாவரும் அறிந்ததே. அவ்வாறிருந்த போதும் தீட்சை பெற்று முக்குறி தரிப்பதையோ விரதங்கள் அனுஷ்டிப்பதையோ அவர்கள் மறப்பதில்லை. அதற்காக வெட்கப்படுவதும் இல்லை. பசுமரத்தாணி போல் சமயக்கல்வி நன்கு பதிந்திருப்பதே இதற்கு காரணம்.

சமய வழிபாட்டில் 1960ம் ஆண்டு புதிய திருப்பம் ஒன்றை கல்லூரி கண்டது. அப்போது முகாமையாளராக இருந்த கே.சி.நடராசா "நடராஜர் விக்கிரகம்" ஒன்றை தென்னிந்தியாவிலிருந்து தருவித்தார். எது எவ்வாறாயினும் அவ்விக்கிரகம் ஆகம முறைப்படியாக பாடசாலை சூழலில் பேணமுடியாது என்ற காரணத்தால் அதற்குரிய அந்தஸ்து அளிக்கப்பட்டது.

விக்னேஸ்வராக் கல்லூரியில் புதிய மாணவர் ஒருவர் சேர விரும்பினால் கல்லூரி நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டும். வடமராட்சியிலே தனிப்பட்ட பண்பாட்டை உடையதாக எங்கள் கல்லூரி மிளிர்கின்றது. புதிய ஆசிரியர் ஒருவர் கல்லூரியினுள் நுழையும்போது கல்லூரியின் பாரம்பரிய பண்பாட்டு நடைமுறைகளை ஏற்கவேண்டியவராவர். முகாமைத்துவ கல்லூரியாக இருந்த காலத்திலும் சரி, அரசினர் கல்லூரியாக மாறிய காலத்திலும் சரி இந்த நடைமுறை தொடரும் பண்பாடாகவே விளங்குகின்றது. அதை இற்றைவரை கல்லூரி காப்பாற்றிக் கொண்டிருப்பதை எண்ணி பெருமிதம் கொள்கிறோம். உதாரணமாக கல்லூரியில் நடைபெறும் சகல விருந்து வைபவங்களும் சைவசமயிகளின் விருந்தாகவே அமைகின்றது.

கல்லூரியிலே தெய்வம் உண்டு. விநாயகர், கலைவாணி, இலக்குமி, அம்மன் படங்கள் வழிபாட்டுச் சின்னங்களாகின. வெள்ளி தோறும் பயபக்தியுடன் ஆராதனை நிகழ்வுகள் இடம்பெறுவதனால் மாணவர்கள் பிரார்த்தனையுடன் தரிசன பலனையும் பெறுவர். நவராத்திரி, குருபூசை தினங்களை கொண்டாடுவதனால் சமய அறிவை கல்லூரியானது மாணவர்களுக்கு அளித்து போற்றுகின்றது. கல்லூரியின் வாசலில் நுழையும்போதே சைவத்தின் மணம் வீசுகின்றது. ஓங்கார வளைவு வரவேற்கின்றது. ஓங்காரவளைவிலே கல்லூரியின் பெயர் உயர்ந்து நிற்கின்றது. ஆதார ஒளி அழைக்கின்றது. ஆரம்ப வகுப்பு முதல் உயர்தர வகுப்பு வரை சமயம் கற்ற பயன் இந்து மாமன்றமாக உருவாகியுள்ளது. ஆலயங்களில் கெட்ட சிந்தனை, விதண்டாவாதம், வீண்பேச்சு நல்லதல்லவே. எங்கோ ஒரு கவிதை நினைவுக்கு வருகின்றது.

"ஆலயம் செல்லும்போது எல்லாப் பொருட்களுமே புனிதமடைகின்றன
மனிதன் மட்டும் ஏன் அழுக்கடைகின்றார்?"

தண்ணீர் தீர்த்தமாகின்றது, சாம்பல் திருநீறாகின்றது. இவ்வாறு ஆலயம் செல்லும்போது யாவும் புனிதமடைகின்றன. ஆனால் மனிதன்.......... அவனது மனம், அவனது செயல்? ஆழமாக சிந்தித்துப்பாருங்கள். அர்த்தம் புரியும். எம் கல்லூரி மாணவர்கள் இதற்கு துணை போகாதவர்கள். அவர்களது அடித்தளம் அங்கு நல்லபடியாக இடப்படுகின்றது. எனவே அவர்களது தடுமாற்றம், ஊசலாட்டம் தேவையற்றது. ஒழுக்கமுள்ள, பண்புள்ள, கல்வியறிவு மிக்க சமயியைத் தான் எம் அன்னை ஈன்றெடுக்கின்றாள்.

இத்தனை சிறப்புமிக்க எம் கல்லூரியின் முதலாவது அதிபராக நவிண்டிலைச் சேர்ந்த திரு.வி.கே.கிருஷ்ணபிள்ளை அமர்த்தப்பட்டார். சிறிது காலத்தின் பின்னர் இவர் பல்மாவட்ட வட்டாரக் கல்வி அதிகாரியாக பதவி உயர்வு பெற்று சென்றார். 1928 கே.பி.அச்சுதன்பிள்ளை அதிபர் காலத்தில் எம்.ஆர்.வாசுதேவனை காப்பாளராக கொண்ட 'மாணவர் பாராளுமன்றம்' அமைக்கப்பட்டது. அதிபர் பத்மநாதன்பிள்ளை காலத்தில் ஏ.கனகசபை அவர்களைக் காப்பாளராக கொண்ட நாடகமன்றம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டது.

1958 திரு.சிவப்பிரகாசம் காலத்தில் கலை, விஞ்ஞானநெறிகள் ஆரம்பிக்கப்பட்டு மாணவர்கள் சேர்க்கப்பட்டனர். இவரது காலத்திலே 'மாணவர் தலைமை' முறையை புகுத்தப்பட்டது. சாரணியமும் முடிப்புடன் செயலாற்றியது, ஆசிரியர் நலன்புரிச் சங்கம் சிறப்பாக இயங்கியது. இச்சங்கம் வறிய மாணவர்களிற்கான புலமைப் பரிசிலை வழங்கியது. கல்லூரிப் பழைய மண்டபம் சகல வசதிகளும் கொண்ட நூல்நிலையமாக மாற்றியமைக்கப்பட்டது.

பாராளுமன்ற உறுப்பினர் திரு.சிவசிதம்பரத்தின் பன்முக வரவுசெலவுத்திட்ட நிதிஒதுக்கீட்டில் மைதான வடமேல் மூலையில் பாலர் வகுப்பு கட்டடம் ஒன்றும், வழிபாட்டறையுடன் கூடிய திறந்தவெளி அரங்கு ஒன்றும் நிறுவப்பட்டன. இவ்வரங்கு இப்போது 'சோமசுந்தர அரங்கு' என அழைக்கப்படுகின்றது. 1971 பொன். கணேசன் அதிபர் காலத்தில் மாணவர் முதல்வர் முறை மீளப்புகுத்தப்பட்டது. பாடசாலை அபிவிருத்திச் சங்கமும் நிறுவப்பட்டது. இவரின் முயற்சியால் கல்லூரி கீதம் திரு.ச. நமசிவாயம் அவர்களால் எழுதப்பட்டு திரு.வி.கந்தப்பு அவர்களால் பாடப்பட்டு வழங்கப்பட்டது. பழைய மண்டபம் பாராளுமன்ற உறுப்பினர் கே.ஜெயக்கொடியின் நிதிஒதுக்கீட்டில் புனரமைக்கப்பட்டது.

1977 திரு.ரி. நமசிவாயம் காலத்தில் இராஜலிங்கத்தின் பன்முக வரவு- செலவுத் திட்ட ஒதுக்கீட்டின் மூலம் மேற்குப்புற மேல் மாடிக்கட்டிடம் நிறுவப்பட்டது. 1980 திரு.கே.சிவபாதசுந்தரம் அதிபராக இருந்த போது சகல விளையாட்டு நுட்பங்களையும் மாணவர்களிடையே புகுத்தி அதில் வெற்றியும் கண்டவர். இக்காலத்திலே யு.்.டு மாணவர் ஒன்றியம் சிறப்பாக ஆரம்பிக்கப்பட்டது.

1986ம் ஆண்டு உயர்தர வகுப்பு மாணவர்களின் 'ஏணி' சஞ்சிகை வெளியிடப்பட்டது. 1991ம் ஆண்டு இவர் ஓய்வுபெற திரு.சிதம்பரநாதன் பதில் கடமையாற்றினார். பின்னர் 1991 திரு.வி.செல்வராஜா அவர்கள் பதவி ஏற்றார். அவர் காலம் 'கல்லூரிப் பவளவிழா' காலம். பின்னர் 2003ம் ஆண்டு எம் தற்போதைய அதிபர் வே.சிவசிதம்பரம் பதவி ஏற்றார். இவர் காலம் 'கல்லூரிப் பொன்காலம;' என்றுதான் அழைக்க வேண்டும்.

ஒரு பாடசாலையின் புகழை பரப்பும் மாணவர் தொழிற்பாடுகளில் விளையாட்டும் ஒரு தலைசிறந்த இடத்தை வகிக்கின்றது. இந்த நல்நோக்குகளை அடைய வேண்டும் என்ற நோக்குடன் இக்கல்லூரி தாபிக்கப்பட்டது. அக் காலத்தில் இந்துப் பாடசாலைகளிற்கு மைதானங்கள் காணப்படவில்லை. எவ்வாறாயினும் விக்னேஸ்வராவிற்கு அதன் கட்டிடங்களிற்கு மத்தியில் ஒரு சிறு நிலப்பரப்பும், தென்திசையாகவுள்ள அம்பலன் வெளியும் விளையாட்டில் ஆர்வமுள்ள மாணவர்களை ஈர்த்தன. 1930 இலிருந்து வகுப்பறைக் கல்வியோடு உடற்கல்வியும் மாணவரிடையே ஆர்வத்தை வளர்த்தது. சிறப்பாக கரப்பந்தாட்டம் மாணவர்களின் மிக மிக விருப்பமான விளையாட்டாக அமைந்தது. இதனால் கைப்பந்தாட்ட மைதானம் அமைக்கப்பெற்று 40ம் ஆண்டுகளில் விக்னேஸ்வரா நாலாபுறமும் புகழ் எட்டச் செய்வதற்கும், வீரர்களை பயிற்றுவிக்கவும் உகந்த களமாகக் காணப்பட்டது. வடமராட்சி ஆசிரியர் சங்கத்தால் நடாத்தப்பட்ட சுற்றுப் போட்டிகளில் விக்னேஸ்வரா தொடர்ந்தும் முதன்நிலையை தக்க வைத்துக் கொண்டிருந்தது. 1945 சங்கத்தில் [T.M] வெற்றிக் கேடயத்தை விக்னேஸ்வரா ஈட்டியது ஓர் சிறப்பம்சம். இது மாத்திரமன்றி, 1954இல் யாழ் குடாநாட்டிலும், அகில இலங்கை ரீதியிலும் விக்னேஸ்வராவின் புகழ் வியாபித்திருந்தது என்பதற்கு கல்லூரி ஏடுகள் சான்று பகரும்.

திரு.எஸ்.பத்மநாதன் எனும் மாணவன் விக்னேஸ்வராவின் கைப்பந்தாட்ட வரலாற்றில் பல திறமைசாலிகளை பழக்கி எடுத்து சிறந்த முன்னணி வீரர்களாக்கிய பெருமை இவர்களையே

சாரும். இவரை தொடர்ந்து உருவான வீரர்களே 1952இல் கொழும்பு திட்டப் பொருட்காட்சியில் அகில இலங்கை ரீதியான போட்டியில் வடபகுதியினரை தோற்கடித்த விக்னேஸ்வரா தென்பகுதியணிகளையும் தோற்கடித்து முதலாம் இடம் பெற்றது பெருமைக்குரியது மட்டுமன்றி எலிசபெத் மகாராணியிடமிருந்து வெற்றிக்கேடயத்தை பெற்றுக் கொண்டது கல்லூரி வரலாற்றில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய நிகழ்வு. இதன் மூலம் கல்லூரி இலங்கைப் படத்தில் தனக்கென ஓரிடத்தைப் பெற்றுக் கொண்டது.

1953இல் திரு.ஜேம்ஸ் உடற்பயிற்சி ஆசிரியராக கடமை ஏற்றதில் இருந்து மாணவர்களுக்கு குத்துச் சண்டை, மல்யுத்தப் பயிற்சிகள் சிறப்பாக அளிக்கப்பட்டன. வேறு பாடசாலைகள் இதில் பிரபல்யமடையாத காரணத்தில் எமது பாடசாலையில் இல்லங்களிடையேயான போட்டிகளோடு இவை முடங்கிப் போயிருந்தன. திரு.ஜேம்ஸ் அவர்கள் மாற்றலாகிச் சென்றதிலிருந்து இவ்விளையாட்டுக்களிற்கு புத்துயிர்கொடுக்க யாருமின்றி இயற்கை எய்தியது.

விளையாட்டுத் துறையிலே விக்னேஸ்வராவின் பொற்காலம் 1950ம் ஆண்டுகளே. கைப்பந்தில் மாவட்ட ரீதியிலும் அகில இலங்கையிலும் முன்னணியில் திகழ்ந்தது. கைப்பந்து, காற்பந்து, தடகள விளையாட்டு, உடற்பயிற்சி போட்டி, வலைப்பந்து ஆகியவற்றில் உற்சாகத்துடனும் ஆர்வமாகவும் கலந்து கொண்டு விக்னேஸ்வரா வீரர்கள் மேம்பாடு எய்தினர். 70களின் பிற்பகுதியில் எஸ்.தேவதாஸ் வடமராட்சியிலும் யாழிலும் விக்னேஸ்வராவின் ஒப்பாரும் மிக்காருமில்லாமல் 400, 800 மீற்றர் ஓட்டங்களில் சாதனைகள் பல படைத்தவர். 1979ல் வட்டார ரீதியாக நடைபெற்ற போட்டியில் பங்கேற்றுக் கொண்டு இருக்கும் போது பொறாமையுற்ற எதிரணியினர் இவரை கல்லால் அடித்து பாரிய உடலூறு விளைவிக்க முயற்சி மேற்கொள்ளப்பட்டமை இங்கு நினைவு கூரவேண்டிய பரபரப்பான நிகழ்வாகும்.

திரு.கே.சிவபாதசுந்தரம் அதிபர் காலத்திலே அன்னாரின் முயற்சியாலும் சிறந்த வழிகாட்டலாலும் தளராத ஊக்குவிப்பாலும் யாழ் மாவட்டத்திலே மாபெரும் வெற்றிகளை ஈட்ட உழைத்தவரும் இவரே. 1982ல் உடற்பயிற்சியில் ஆண், பெண் இருசாராருமே முதலாம் இரண்டாம் இடங்களை பெற்றனர். 1990இலும் விக்னேஸ்வராவின் எல்லா அணிகளுமே இப் போட்டிகளில் முதலிடம் பெற்று சாதனை புரிந்தன. 1986ல் 17வயதிற்குட்பட்ட உதைபந்தாட்ட குழு யாழிலே மூன்றாம் இடத்தை பெற்றுக் கொண்டது. 1999ல் விக்னேஸ்வராவில் 75 ஆண்டுகள் நிறைவையொட்டிய பவளவிழா காலத்தில் 17 வயதிற்குட்பட்ட உதைபந்தாட்ட வீரர்கள் யாழில் முதலாமிடத்திற்கான வெற்றிக் கேடயம் பெற்று கல்லூரிக்கு புகழ் சேர்த்தனர். இதே அணி முரளி ஞாபகார்த்தக் கிண்ணப் போட்டியில் மாவட்ட மட்டத்தில் இரண்டாம் இடத்தையும் பெற்றது. இவ்வணியின் பயிற்றுனர்களாக திருவாளர் டி.எம்.வேதாபரணம், கே.தர்மேந்திரா, வி.கணேஸ் காணப்பட்டனர்.

ஒரு கல்லூரியின் புகழும், முதன்மையும் வகுப்பறைக் கல்வியாலும், பரீட்சைப் பெறுபேறுகளாலும் மதிக்கப்படுவதில்லை என்பதும் உடற்கல்வித் துறையாலும் கிடைக்கும் பெறுபேற்றாலும் அவை பூர்த்தி செய்யப்பட வேண்டும் என்பது யாராலும் ஏற்றுக்கொள்ளப்படும் உண்மை என்பதை விக்னேஸ்வரா புலப்படுத்துகின்றது.

ஒரு ஊரிற்கு அழகு பாடசாலை. பாடசாலைக்கு அழகு துடிப்புள்ள ஆசான்களும் ஆர்வமுள்ள மாணவர்களுமே. இவ்வாசான்கள் பணிபற்றி கூற,

"மயிர்க்கொடிகள் நம்மை
பட்டாம் பூச்சிகளாக்னீரே!
கூட்டுப் புழுக்கள் நம்மை
நிறையுடலி யாக்கினீரே!
தேனீக்கள் நம்மை
நற்தேன் பெற வைத்தீரே!
தேடல்கள் நமக்கு
நல்விடை தந்தீர்களே!

கேள்வியாய் இருந்த நம் வாழ்வை
நல்பதில்களாக்கிய ஆசான்கள;"

என்ற கவிதை தான் நினைவுக்கு வருகின்றது. எம் கல்லூரி மாணவர்களிற்கு ஆசிரியர்களிற்கும் தெய்வதிற்கும் வேறுபாடு தெரியாது. அவர்களிற்கு ஆசிரியர்கள்தான் தெய்வங்களாயின. கரவெட்டி மக்கள் முன்னேற்றத்திற்கு இக் கல்லூரி ஆற்றும் பங்கு மிகவும் மகத்தானது. கல்லூரியின் இம் மகத்தான முன்னேற்றத்திற்கு முன்னின்று உழைப்பவரகள் எம்மருமை ஆசிரிய பெருந்தகைகளே. கிராமிய எழுச்சியானது ஒரு நாட்டினை முழுமை பெறச் செய்கின்றது. அப் பணியை ஆற்றி முழுமை காண்பதில் எமது விக்னேஸ்வராக்கல்லூரியின் பணி அளப்பரியது. மறைந்து கிடக்கும் மூளை வளங்களை வெளிக்கொணர்ந்து நாட்டிற்கேயன்றி உலகத்திற்கே பயன்பெறச் செய்த பெருமை கல்லூரிக்கும் கற்பிக்கும் ஆசான்களிற்குமே சாலப் பொருத்தமானதாகும்.

விக்னேஸ்வராக்கல்லூரியின் ஆசிரியர்கள் அன்பும், கடமையுணர்வும், கண்டிப்பும், நகைச்சுவை பேச்சும், நெறிபிறழா தன்மையும் கொண்டவர்கள். அதிபரோ ஒப்பாரும் மிக்காருமில்லாத அதிபர் தான் வே.சிவசிதம்பரம் அவர்களை எண்ணிப் பார்க்கின்றேன் வறுமைப்பட்ட குடும்பங்களை (கல்வியில் ஆர்வமுள்ளவர்கள்) உயர் கல்விப் பேறு காரணமமாக பல்வேறு சமூகத்தொண்டு நிறுவனங்களுடாக அவர்களை பொருளாதார சமூகமட்டத்தில் உயர்த்தி விட்டார். இக்கல்லூரிக்கும் அதிபருக்கும் நிகராக எதையும் கூற முடியாது.

"ஆசை அறுமின் ஆசை அறுமின்
ஈசனோடாயினும் ஆசை அறுமின்"

என்று தானே சைவசித்தாந்தங்கள் கூறுகின்றன எம் கல்லூரி மாணவர்கள் நிலையற்ற எதிலுமே ஆசைகொள்ளவில்லை அவர்கள் சகல துறைகளிலும் தாம் மிளிர வேண்டும் என்ற ஆசைகொண்டவர்கள். அந்த வகையில் தான் 1958ல் அகில இலங்கை ரீதியான கட்டுரைப்போட்டி, பேச்சுப் போட்டிகளில் மாணவர்கள் கலந்து கொண்டு முதலிடம் பெற்றனர். இவர்கள் விக்னேஸ்வராவில் கோலாகலமாக கௌரவிக்கப்பட்டனர். இவ்வாறான கல்லூரியின் உயர்ச்சி கண்டு 1959ல் பெருமளவிலான ஆங்கில நூல்கள் யுளயைகயனெயவழைெ ஆல் அன்பளிப்பு செய்யப்பட்டது. இவற்றுள் விஞ்ஞான தொழில்நுட்ப, கலைக்களஞ்சியங்களும் அடங்கும்.

1931ம் ஆண்டு ஜவகர்லால் நேரு நெல்லியடி வந்திருந்த போது விக்னேஸ்வராவே திரண்டு வந்து அவரை வரவேற்று வாழ்த்தி வழியனுப்பி வைத்தது. 1955.03.19 அன்று ரோக்கியோ — ஜப்பானில் இடம் பெற்ற அறுவர்களிற்கான உலக கண்காட்சியில் விக்னேஸ்வராவின் ஆக்கங்களும் அங்கு பலரை மிளிர வைத்தது. அதுமட்டுமன்றி செல்வன் எஸ் துரைரட்ணம் என்பவர் கொழும்பில் இடம் பெற்ற உணவு, விவசாய கண்காட்சியில் பங்குபற்றி வெள்ளிப்பதக்கம் பெற்று கல்லூரி அன்னையை மேலும் உயர வைத்தார்.

25.08.1998ல் இந்தியா- புதுடில்லியில் இடம் பெற்ற உலக சிறுவர்களிற்கான கண்காட்சியிலும் விக்னேஸ்வரா பங்குபற்ற தவறவில்லை. 1960ம் ஆண்டு ஜெயவர்த்தனா(உயரதிகாரி) செஞ்சிலுவை சங்க அதிகாரி வருகை தந்து மாணவர்களது செயற்பாட்டை பாராட்டி சென்றார். 1978ல் இடம் பெற்ற நாடகப் போட்டியிலே சகுந்தலை நாடகம் முதலிடம் பெற்று கல்லூரிக்கு பெருமை தேடித்தந்தது. இன்று இருள் நீங்கி ஒளி வீசும் காலம் அறிவுச் சுடர் அவனியெங்கும் ஒளிபரப்புங் காலம். நாட்டிலே புதிய வேகம் மக்கள் மனதிலே புதிய மோகம் எங்கும் எழுச்சி, மக்கள் மனதிலே மாறாத கிளர்ச்சி. முன்னேற்றவாதிகள் முறுக்குடன் முன்னேறும் போது தன்னேற்றம் கருதி சில தலைவர்களாலே தமிழன் வஞ்சிக்கப்பட்டான் அந்த வகையில் விக்னேஸ்வரா அதற்கு விதிவிலக்கில்லை.

எமது கலைக்கோயில் இவ்வாறு எல்லா வளங்களும் நிறைந்த தனித்துவமான ஒரு பல்கலைக்கழகமாக விளங்கும் காலத்தில் எமது மாணவ சமுதாயமும், மக்கள் சமுதாயமும் பெறும் பயன்களோ எண்ணில் அடங்கதாவை. இங்கிருந்து முளைத்தெழும் மரங்களின் இணையில்லா பயன்பாட்டினால் இவ்வையகமே நிறைவு பெறும். கல்லூரியின் வளர்ச்சிக்கு பக்கபலமாக வலதுகையாய் வந்தமைந்தார் 2002ம் ஆண்டு பதவி பெற்ற எம் கல்லூரி அதிபர். கடமை, கண்ணியம், கட்டுப்பாடு உடையவர். எதிலுமே நேர்மை நெறிபிறழாதன்மை. கல்லூரி பற்றுடையவர்.

இவர்காலத்திலே தான் அகில இலங்கை ரீதியிலே க.பொ.த (சா.'.த) பரீட்சையில் நான்காம் இடம் பெற்று பலர் பார்வையை எம் பக்கம் திருப்பப்பட்டது. "மாற்றங்கள் மாற்றத்திற்கே" என்ற வாக்கிற்கமைய வடக்கின் வசந்தம் வேலைத்திட்டத்தின் கீழ் கிராம மட்டத்தில் உள்ள கல்வியறிவில் மேம்பாடுடைய பாடசாலைகளை சகல வழிகளிலும் உயர்த்தும் ஒரு செயற்றிட்டம் தான் "இசுறு பாடசாலை". யாழ் மாவட்டத்திலே முதல் தரமாக தெரிவு செய்யப்பட்ட கல்லூரியாக விக்னேஸ்வராக்கல்லூரி வீறு நடை போடுகின்றது. பல்வேறு செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. நகர்புற பாடசாலைகளே எம்கல்லூரி பெயர் கேட்டு பயப்படுமளவு அறிவால் உயர்கின்றோம்.

ஆம் கல்லூரி சகல கற்கை நெறிகளையும் தன்னகத்தே கொண்ட வடமராட்சியில் புகழ் பூக்கும் பல்கலைக்கழகமாக தனித்துவமடைந்து விளங்க வேண்டும் என்பது எனது கனவு. இது நனவாகுமா? மண்டபங்கள், கேட்போர் கூடங்கள், பல வகுப்பறைகளை கொண்ட வானளாவிய உயர்ந்த மாடிக் கட்டிடங்கள், நூல் நிலையம், திறந்த வெளி அரங்கு, பரந்த விளையாட்டு மைதானம், குழாய் நீர் வசதி, மின்னிணைப்பு வசதி, காணி வசதிகளைக் கொண்டு தன்னிறைவு பெறும் கலைக் கோயில் இது. மேலும் கிழக்கே அமைந்திருக்கும் காணி நிலம் வேண்டும் ஆங்கே மாணவர் விடுதியும் அமைய வேண்டும் என்பது எனது நெஞ்சை விட்டகலாத ஆசை.

விக்னேஸ்வரா பற்றியும் அதன் செயற்பாடு பற்றியும் எண்ணிப் பார்க்கும் போது முதலாவதாக கலைத்துறை எதிர்காலத்தில் சிறப்புற வேண்டும் என்பது எனது அவா. கலைத்துறை பிரிவான இயல் - இசை – நாடகம் என்னும் முத்தமிழும் இங்கு தவள வேண்டும். இதன் மூலம் புதுயுகம் படைக்க வேண்டும். கல்லூரி அமைந்துள்ள சூழல் மண்வளமற்றதாக இருப்பினும், அயலே அமைந்துள்ள நெய்தல் நிலவோரமாக வளமான நிலப்பரப்புள்ள பகுதியை விவசாய தேவைக்கு பயன்படுத்தும் வாய்ப்பு ஏற்படுத்தப்படவேண்டும். மாணவரின் விவசாய அறிமுறை, செய்முறை வளர்ச்சியுற்று மேம்பட விரிவுரையாளர், போதனாசிரியர்கள், பேராசிரியர்கள் இத்துறையில் தேங்கி வழிய வேண்டும்.

விக்னேஸ்வரா கரவெட்டி பண்பாட்டில் இறுகக் காலூன்றியுள்ளது. இதில் முக்கியம் என்னவென்றால் கரவெட்டியின் சமூக பண்பாட்டில் காணப்பட்ட ஒரு இறுக்கப்பாடு கல்லூரியில் இல்லாது போனமை கல்லூரியில் பல சமூக மாணவர்கள் சம மாணவர்களாகவே உலவினர், அளவளாவினர். தாழ்த்தப்பட்டோருக்கு அனுமதி வழங்குவதிலும் கூட விக்னேஸ்வரா பெரிதும் பின்னிற்கவில்லை. யாழ்ப்பாணக் கல்லூரிகள் 1960க்கு பின்னரே திறந்த ஒரு கொள்கையை கடைப்பிடிக்க விக்னேஸ்வராவோ 1947 இல் அச்சாதனையை ஈட்டிவிட்டது. விக்னேஸ்வரா விசாலமான பரிமாணங்களை கொண்டதாக விளங்குகின்றது. விக்னேஸ்வரா ஆசிரியர்களது பெருமைகளும், மாணவர்களது சாதனைகளும் நம்மை பிரமிக்க வைக்கின்றன.

"உண்மை வெல்லும்;" 'நாங்கள் எப்போதும் தளரோம்' என்பது எமது கல்லூரியின் கவச வாசகம். தாரக மந்திரம். இது விக்னேஸ்வரா தமது மாணவர்களுக்கு மாத்திரமின்றி உலகுக்கே போதிக்கும் உன்னத புத்திமதி. இந்த வாசகத்துக்கு இன்று ஒரு புதிய கருத்துப்பரிமாணம் உண்டு. அதை நாம் உணரவேண்டும். கல்விச்செல்வமே மேலான செல்வம். ஆகவே பழைய மாணவர்களும் இன்றும் நாளையும் கற்கின்ற, கற்கப்போகின்ற மாணவர்களும் விக்னேஸ்வரா அன்னைக்குச் செய்யும் கைம்மாறு இக்கல்லூரியை நானிலம் போற்றிட மிளிரச்செய்வதே ஆகும்.

"வாழ்க விக்னேஸ்வரா, வளர்க அதன்பணி
வாழிய வாழிய வாழியவே
ஆழ்கடல் தாண்டி அகில உலகமும்
அதனொளி என்றென்றும் வீசுகவே"

**செல்வி பா. தேனுஸா**

தரம் 11ஊ
யா/விக்னேஸ்வரக்கல்லூரி
கரவெட்டி

# நவீன கற்பித்தல் முறைகளுக்கு ஏற்ப நாமும் மாறுவோம

பாடச் சட்டகத்துள்
சடுகுடு விளையாட்டு
குண்டுச் சட்டிக்குள்
குதிரை ஓட்டியதால்
குவலய அறிவே குன்றிப் போனது.

தொழில் நுட்ப உலகு எம்மை
தொட்டுக் கூடப் பார்க்கவில்லை
கரும்பலகைக்கு மட்டும் ஏன்
"கறள்" பிடிக்கவில்லை?
எம் மூளை துருவேறியதாலோ?

பள்ளிக்கூடக் கணினி போல்
பிள்ளையும் ஏன் உறங்குகிறான்?
அன்னையின் பின் நாம்
தாலாட்டுப் பாடுவதாலோ
மாதாவின் பின்பு குருவை வைத்தார்

விளக்கைச் சுற்றும் விட்டில்களாக
பிள்ளைகள் அல்ல
நாம்தான்!

புழக்கப்பட்டுப் போனதால்
பழையதையே
பாராயணம் பண்ணுகிறோம்
கிறுக்கல் விழுந்த
ஆறுவெட்டு (ஊனு) போல
சொன்னதையே சொன்னால்
கிளிப்பிள்ளை பாடம் தானே பிள்ளைக்கு

காலவோட்டம்
ஏன் காலாலட உதைக்கும்
குதிரையானது?
உன்கை ரேகை எங்கே
கரும்பலகையும்
வெண்கட்டியும்
உன் வீட்டுச் சீதனமா? முதுசமா?

பிள்ளை என்ன
பிழை செய்தான்
அவன் புத்தக மூட்டையை
இறக்க கைகொடு!

பிரேதம் போல் அவன் முகம்
மனத்தையும் பிணமாக்குவதா?

புதுமை காட்டு கற்பித்தலில்
அவன் சிந்தனையை கிளறு

வைக்கோற் பதரின் கீழ்
அவன் நெல் மணி!

தூர எறி
எல்லாவற்றையும்
கற்பிக்க நாம்கற்போம்!
புதிய திட்டமிடுவோம்!
மூளைச் சலவை செய்வோம்!
திட சங்கற்பம் கொள்வோம்.

மேந்தலை எறியி
புல்லூடக எறியி
கணினிக் கல்வி
தொலைக்காட்சி, வானொலி
செயற்பாட்டறை
ஆய்வு கூடம்
எல்லாவற்றையும்
எம் கையிலெடுப்போம்!

கனக்க உபகரணம்
காட்சிப் படுத்த
கற்றல ங்கே
கனிவாய் கைகூடும்

வியூகம் வகுத்தா
வித்தை வசப்படும்
விஞ்ஞானி கூட
எம் கையில்

ஆடல் பாடல்
ஆபிநயக் கலைகள்
தேடல் கூடல்
தெளிவாராய்தல்
மகிழ்வாய்க் கற்க
மகிழ்வுறும் மனமே!

இன்றே வழிசமைப்போம்
எதிர் காலம் எம்கையில்
ஏளனம் செய்வதா?
நவீன முறைகள் நாம் வகுப்போம்
கற்றல் நுட்பம் கவினுறச் செய்வோம்!
நானிலம் போற்றும்
நல்லாசிரியராம் நாமம்
வாரீர்.

**திரு. பௌநந்தி**
ஆசிரியர்

# இரை மீட்கையில் அமரர்கள்

என்ன நாங்கள் எல்லோரும் விலங்குகளா? இரை மீட்கையில் எனத் தலையங்கம் இடப்பட்டுள்ளது என்று நினைக்கிறீர்களா? நினைப்பீர்களேயானால் நீங்களும் விலங்குகளே.
ஆம் விலங்குகள் இரை மீட்டகின்றன அல்லது அசை போடுகின்றன. ஆறறிவுள்ள மனிதர்களாகிய நாம் 'இரை' என்னும் கடந்தகால நினைவுகளை மீட்டிப் பார்க்கின்றோம். சாதாரணமாக நண்பர்கள் ஒன்றாகக் கல்வி கற்கின்றவர்கள், ஒரே ஊரவர், இப்படி வகை வகையான குழுக்கள் சேருமிடத்தில் இந்த அசை போடுதல் -அந்த நாள் ஞாபகங்கள் நெஞ்சிலே வந்ததே என்று அளவளாவுவர்கள் இது நலம் எல்லோரும் அறிந்ததே. அந்த நாள் நினைவுகள் சந்தோசமானவையாக, துன்பம் நிறைந்தவையாக, இன்னும் பல தரப்பில் அமையும். இதுவே எனது பார்வையில் இரை மீட்பாகும். இங்கே நான் இரை மீட்பாக முன்னால் ஆசிரியர்களை நினைவு கூருகின்றேன். அதுவும் குறிப்பாக அமரர்களாகிய ஆசிரியர்களை நினைத்துப் பார்க்கிறேன். அண்மையில் அமரர்களாகிய ஆசிரியர்களிலிருந்து சுமார் 30 ஆண்டுகள் பின்னோக்கிச் செல்கின்றேன்.

**திருமதி.செல்லம்மா கார்த்திகேசு**

செல்லம்மா ரீச்சர் என எல்லோராலும் அன்பாக அழைக்கப்பட்டவர்.விக்னேஸ்வராக் கல்லூரிக்கருகில் வசித்தவர். கரவை ஊரவர். நான் அவரிடம் கல்வி கற்கவில்லை. ஆனால் அவரைப் பற்றி எனது தந்தையார் மூலமாகவும், சுற்றத்தார் மூலமாகவும், சக மாணவர் மூலமாகவும் அறிவேன். ஆரம்பக் கல்வியை மாணவர்களுக்குப் போதித்தவர். அவரது முன்னைய பாடசாலைகள் பற்றி எனக்கு தெரியவில்லை. நான் அவரைக் கண்ட நாள் முதல் அன்னார் அமரராகும் வரையில் அவரை நான் மல்டி கலரில் பார்த்ததேயில்லை. வெண்மைக்கு ஓர் எடுத்துக் காட்டாக திகழ்ந்தார். எமது கலாச்சாரப் பாரம்பரியத்தை பேணிக் காப்பதில் கண்ணாக இருந்தார் என்றால் மிகையாகாது.
ஏன் என்ற கேள்விக்கு உங்கள் அனைவருக்கும் விடை தெரியும். மிகவும் கண்டிப்பார்கள் என்பார்கள். ஆனால் அக்கண்டிப்புத்தான் தங்களை இந்நிலைக்காக்கியது என்பார். மறுபுறம் உண்மையை என்றுமே மறுக்க முடியாது. 80களில் இளைப்பாற்றிய பின்னர் தனது பேரக் குழந்தைகளோடு இலங்கை, இங்கிலாந்து, கனடா என வசித்து விட்டு மிக அண்மையில் இவ்வுலக வாழ்க்கையை கனடா நாட்டில் நீத்தார்... அன்னாரது ஆத்மா தனது மாணவமணிகளது கல்விச் செழிப்பில் கழிப்புற்று இனிதே சாந்தியடைய பிரார்த்திப்போமாக.

**திருமதி.மனோண்மணி நடராஜா**

எவராலும் என்றுமே மறக்க முடியாத ஒருவர் மணி ரீச்சர் என்று எல்லோராலும் அழைக்கப்பட்டாலும் எனக்கு அவர் 'மனோண்மணி' ரீச்சரே.
மலையக நாட்டில் அதிபர் தரத்தில் இருந்த அன்னாரை எனது தந்தையார் ஆசிரியராக கல்லூரிக்கு பதவியிறக்கம் செய்தார். ஒருவகையில் சுயநலம் கல்லூரி வளர வேண்டும் கரவையூர் செழிக்க வேண்டும். முகாமைத்துவத்திலிருந்து அன்னாரை இறக்கி அவரிடமிருந்த ஆசிரிய ஆற்றலை வெளிக் கொணர வேண்டும். புகழ் பூத்த ஒரு மணியாக விதைக்கப்பட வேண்டும் என்ற சுயநலத்தில் ரீச்சரைக் கல்லூரிக்கு கொணர்ந்தார். 1981இன் பிற்பகுதியில் அல்லது 1982ல் இக்கல்லூரிக்கு ஆசிரியராக வந்து சேர்ந்தார். அக்காலத்தில் அவரைப் பற்றி எதுவும் எனக்குத் தெரியாது. ஆனால் 1982ம் ஆண்டு கல்லூரியில் இடம்பெற்ற பரிசளிப்பு விழாவிற்கு எனது தாயார் சகிதம் சென்றேன். ஆங்கே ஒரு தாள லய நாடகம் அம்மணியால் மேடையேற்றப்பட்டது. இருவர் மட்டுமே நடிகர்கள் திரு.இராசேந்திரன் கணவனாக ச.பாஸ்கரன் மனைவியாக நடித்தனர். மனைவி தனக்கு இது வேண்டும் அது வேண்டும் எனக் கேட்பார். அவ்வாறு கேட்கும் போது அவர் ஒவ்வொரு ஆசிரியரைக் கூறி அவர் சொன்னார் இவர் சொன்னார் என்பார். அவற்றை மறுத்துக் கணவர் வேறோர் ஆசிரியர் கூறினார் எனக் கூறுவதாகவும், கருத்தரித்த ஒருவர் என்ன உண்ண

வேண்டும் என்பதையும் நகைச் சுவையாகவும் சகல சக ஆசிரியர்கள் எவ்வாறு கூறியிருப்பார்கள் என்பதை அக்கால சினிமா பாடல்களின் மெட்டில் மிகச் சிறப்பாக இயற்றியிருந்தார். அன்றே என்னைக் கவர்ந்து கொண்டார். தொடர்ந்து பல நாடகங்களை மேடையேற்றினார். என்னையும் நடிகராக்கினார். மாவட்ட மட்டத்தில் பரிசில்கள் அள்ளிக் கொணர வைத்தார். 1986ம் ஆண்டு கலை விழா ஒன்றை ஏற்பாடு செய்து கல்லூரி விஸ்தரிப்பிற்கான நிதி மீட்டலில் பெரும் பங்காற்றினார். எங்களில் பலர் பெண்வேடம் ஏற்றோம். "ஒப்பாரி", பிட்டவித்தல், தாளலய நாடகம் எனப் பல நாம் அவர் மூலம் அரங்கில் நிறைவேற்றினோம். இன்றும் அந்நாட்களை என்னால் மறக்கமுடியாது.

குறிப்பாக மாணவிகளே ஆசிரியைகளை விரும்புவார்கள். ஆனால் பால்பாகுபாடின்றி அனைத்து மாணவர்களும் அவரை விரும்பினார்கள். காதலித்து கரம் பிடித்த கணவர் மணியம்மையை துவிச்சக்கர வண்டியில் கல்லூரிக்கும், தனியார் நிறுவனங்களுக்கும் ஏற்றிச் செல்வது இன்னும் கண்முன் நிழலாடுகிறது. கணவரது இழப்பைத் தொடர்ந்து வெண்மணியாக எங்கள் முன் உலா வந்தார். கரவை மண் முன்னேறியது போல் வேதாரணியேஸ்வராவும் முன்னேற வேண்டும். ஆதற்கு அன்னார் மிகவும் அதிபராக வேண்டும் இறைவன் நினைந்து நியமித்தார். மீண்டும் அதிபராகி அக்கல்லூரியை வளர்த்தெடுத்தார்.

1993ம் ஆண்டில் அவர் இளைப்பாறி விட்டாரோ அல்லது விடுதலை உணர்வு தூண்டியதோ அவர் தனது நாட்களில் பெரும்பகுதியை வன்னி மாநிலத்தில் கழித்துவந்தார். எனது தந்தையாரின் இறுதிக் கிரியைகளில் கலந்து கொள்ளச் சென்ற போது வன்னியிலிருந்து வந்து என்னைப் பார்த்தார். நாம் அளவளாவினோம். தனது அக்கால வாழ்க்கை பற்றிப் பெரிதும் கூறாவிட்டாலும் ஒரு புகைப்படம் மூலம் தன்னிலையை விளக்கினார். தொடர்ந்து அன்று முதல் எமக்குள் கடித உறவுகள் தொடர்ந்தது.

2003ம் ஆண்டு அவரை நான் வன்னியில் சென்று சந்தித்தேன். உடலால் மிகவும் பாதிப்புற்றிருந்தாலும் உள்ளத்தால் மிகவும் திடமாக இருந்தார். 2009ம் ஆண்டு அன்னார் இவ்வுலகை நீத்திருந்தாலும், எமதுள்ளங்களிலிருந்து என்றுமே நீங்கா ஒரு மணி. அன்னார் ஒரு சகலதுறை விற்பன்னர் என்பது சகலருக்கம் தெரிந்ததே.

**பண்டிதர் நமசிவாயக் குருக்கள்**

எல்லோருக்கும் குருக்களாகத் தெரிந்தவர். கல்லூரிக்கு வந்தது முதல் பண்டிதராகவும் தெரிந்தார். எனக்கு அவரைச் சிறு வயது முதலே தெரியும். அந்திரான் முருகமூர்த்தி ஆலயத்தில் திருவெம்பா பூஜைகளை நடாத்த வருவார். எங்களுடைய திருவெம்பாவிற்கு நான்தான் சங்கற்பம் செய்து கொள்வேன். 1976ம் ஆண்டு முதல் அவ்வாறு நடந்ததாகவே ஞாபகம். அன்னாரிடம் கற்கக் கொடுத்து வைக்காவிட்டாலும், மற்றைய வகுப்புக்களில் அவர் கற்பிக்கும் போது கேட்டும், மாலை வேளையில் நாம் விளையாடச் செல்லும் போது அவர் பாலஃபண்டித வகுப்புக்களை நடாத்துகையில் கேட்டும் அவரது திறமை, ஆற்றல், என்ன என்று அறிந்து கொண்டேன்.அன்னாரது இழப்பு தமிழ் சமய நன்னுலகுக்கு ஒரு பெரும் விழுக்காடு.

**திரு.நல்லதம்பிஃதிரு.வீரகத்தி**

எனக்குக் கற்பித்தவர்கள் பலர் இன்னோர் உலகில் அல்லாமல் இவ்வுலகில் அங்கும், இங்கும் உலா வருகின்றனர். ஆனால் கற்காத, பழகிய பல ஆசிரியர்களை நாம் இழந்து விட்டோம். இவர்கள் இருவரும் இரு துருவம் போல், நிறத்தால், குணத்தால், ஏன் உருவத்தால் கூட. நடை, உடை, பாவனை அனைத்தும் ஒருங்கமைந்தவை. முன்னவர் சிலேடையில் வல்லவர். பின்னவர்

சொல்லத் தெரியவில்லை. இருவரது பிரிவுகளும் எப்போது எவ்வாறு என்று சரிவரக் கூறமுடியவில்லை. ஆனால் இப்போது எங்களுடன் இல்லை என்பது மட்டும் தெளிவு. இருவரும் இராமசாமி இல்லத்தவர். இருவரும் தமிழ், சமயம், விவசாயம் கற்பித்தார்கள். முன்னவர் ஆங்கிலமும் கற்பித்ததாக ஞாபகம். இவர்களிடம் கல்வி கற்றவர்கள் இவர்களை ஒருபோதும் மறக்கமாட்டார்கள். இவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்போமாக.

**திரு.சுப்பிரமணியம் (Artist Master)**

கம்பீரமும், மிடுக்கும், வளைய நடையும் இன்றும் கண்முன் வந்து செல்கிறது. கல்லூரியோடு பின்னிப் பிணைந்தவர். மாணவனாக, ஆசிரியனாக, தொண்டனாக, உதவி அதிபராக என பல தரப்பட்ட பதவிகளுக்கு தன்னைப் பகிர்ந்தளித்தவர். மிகவும் கடுமையானவர். ஆனால் அக்கடுமைகளை ஏற்று நடப்பவர்களை விரும்புவார்.

முதன் முதலாக 1980ம் ஆண்டு அவர் எங்கள் வீட்டிற்கு வந்தபோதே அறிவேன். ஒரு குறுகிய காலம் இடைக்கால அதிபராக அப்போது பணியாற்றிக் கொண்டிருந்தார். எனது தந்தையாரை கல்லூரிக்கு அதிபராக்க வேண்டும் என்ற திடமான முடிவோடு வந்திருந்தார். வெற்றியும் கண்டார். 1983ஆம் ஆண்டில் ஒரு சில காலம் சித்திரம் கற்கும் சந்தர்ப்பம் எனக்கு கிடைத்தது. அவர் அன்று கூறிய பல அறிவுரைகள் இன்று எனக்கு பல வழிகளில் உதவி செய்கிறது. என்றும் நன்றி உடையேன்.

2001ம் ஆண்டில் அவரை நான் கொழும்பில் சந்தித்தேன். தொடர்ந்து இங்கு வருவதற்கான விசாவில் இடையூறு ஏற்பட்ட போது அவ்வழக்கைக் கையாள எனக்கு சந்தர்ப்பம் கிடைத்தது. ஆனால் வழக்காட முன்பே தனக்கு இவ்வுலகு வேண்டாமென்று சென்றுவிட்டார். புகழ் விரும்பாத புகழ் மனிதர். ஓய்வுப் பிரியாவிடையைக்கூட விரும்பவில்லை. மிகவும் எளிமையான, நேர்மையான, மனிதர். இனி ஒருபோதும் இவ்வாறான ஒருவரோடு பழக, கற்க நாம் கொடுத்து வைக்கப்பட மாட்டோம். அவரது ஓவியங்கள் இன்றும் கதை சொல்வது போல, அவரும் எம்மோடு தொடர்ந்து உலா வருவார்.

**திரு.கந்தப்பு (முருகேசு)**

இவர்கள் இருவரும் சகோதரர்கள், ஆசிரியர்கள் இருவரும் ஒன்றாகவே கொடியவர்களால் மடிய வேண்டிய நிலைக்கு 1987ல் உள்ளானார்கள். இவர்கள் ஒருவரைப் பற்றியும் அதிகம் எனக்குத் தெரியாது. ஆனால் அவர்கள் இருவரும் தமிழ், சமயம் என்பவற்றோடு நாடகவியலும் கற்பித்ததாக அறிகிறேன். இவர்களது இழப்பு கரவை மண்ணே அறியக் கூடியதொன்று. ஓம் சாந்தி!

**திரு.ரங்கநாதன்**

கரணவாய் தந்த மைந்தன். மெல்லிய உடல்வாகு கொண்ட கணித விற்பன்னர். உயர்தரத்திற்கு கணிதம்(தூய) கற்பித்தவர். சிறப்பாக விளக்கமளிப்பார். நாம் சரியாக விளங்கிக் கொண்டால் எல்லாம் இலகுவாகும். இல்லாதவிடத்து எல்லாமே விழலுக்கிறைத்த நீர்தான்.

அன்னார் கற்பித்தலோடு மட்டும் நின்றுவிடாது, விவசாயத்திலும் கடுமையாக உழைத்தார். வெற்றி தோல்வி எனச் சகலத்தையும் கண்டு களித்தார். காலன் தன்னகத்தில் கணிதம் கற்கவோ கற்பிக்கவோ விரும்பி அவரை தன்னோடு அவரது இளமையிலேயே அழைத்துவிட்டான்.அவரோடு பழகிய காலங்கள் என்றும் நெஞ்சை விட்டகலாது.

**திரு.நல்லதம்பி**

இன்னுமொரு நல்லதம்பி மாஸ்டர். இவர் அச்சுவேலியைப் பிறப்பிடமாகாக் கொண்டவர். சிலகாலம் விவசாய ஆசிரியராக கற்பித்தவர். இவரும் திரு.ரங்கநாதன் ஆசிரியர் போல சிறந்த விவசாயி.

ஓரிரு மாதங்களே இவரிடம் விவசாயம் கற்றேன். ஆனால் இன்று மேலும் அறிவுரை கேட்க அவர் எம்மோடு இல்லை.

**திரு.கதிரமலை**

சிறந்தவொரு வணிக ஆசிரியர். மணி ரீச்சர் எவ்வாறு மாணவரைக் கவர்ந்தாரோ அவ்வாறே இவரும் மாணவர்களைக் கவர்ந்தவர். ஆனால் புற்று நோயால் மரணத்தைத் தழுவிக் கொண்டு கல்லூரிக்கு ஒரு திடீர் இழப்பை ஏற்படுத்தினார். அவரிடம் கல்வி கற்றவர்கள் எவருமே அவரை மறக்க மாட்டாாகள்.

**திருமதி.நாகம்மா**

இவரும் செல்லம்மா ரீச்சர் போலவே ஒரு வெண்புறாவாக நான் கண்ட நாள் முதல் உலா வந்தவர். ஆரம்பப் பாடசாலை ஆசிரியராக மாணவர்களுக்கு அறிவூட்டக்கூடியவர். மிகவும் எளிமையானவரும் மெலிதானவரும். கரவை தந்த இன்னொரு அம்மா. இவரைத் தெரியுமே தவிர எனக்கு இவரிடம் கற்கவோ பழகவோ சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. இதனால் மேலும் எதுவும் கூறத் தெரியவில்லை.

**திரு.சிவபாதம்**

எனக்கு கல்லூரி பற்றிய விஞ்ஞானம் தெரிந்த போதும் இவர் எங்களைவிட்டுப் பிரிந்து விட்டார். 1981ம் ஆண்டாக அல்லது 1982ம் ஆண்டில் அவரது இழப்பு கல்லூரிக்கு கிடைத்தது. அவரைத் தெரிந்திராத போதும், அவரது குடும்பத்தவர்களோடு பழகும் வாய்ப்பு Londonல் கிடைத்துள்ளது. அவரது துணைவியாரை, குழந்தைகளை வருடத்தில் நான்கைந்து முறை சந்தித்து உரையாடவும் அன்னாரை நினைவு கூரவும் இறைவன் எனக்கு கருணை கூர்ந்துள்ளான். அன்னார் வர்த்தகத்தில் சிறந்த ஆசான் என அறிகிறேன்.

**திரு.மாணிக்கம், திருமதி.வள்ளியம்மை, திருமதி.அற்புதம்**

இவர்கள் அனைவரும் ஆரம்பக்கல்வி ஆசிரியப் பெருந்தகைகள். ஆரம்பக் கல்வியோடு தமிழும் சமயமும் போதித்தார்கள். கல்லூரியை சுற்றியே அவர்களது வீடுகளும் அமைந்திருந்ததால் எவ்வேளையிலும் அவர்களது சேவை கல்லூரிக்குக் கிடைத்தது. இவர்களிடம் எல்லாம் எனக்கு கற்கவோ பழகவோ கிடைக்காததால் மேற்கொண்டு எழுத முடியவில்லை. மேலே எழுதிய அமரர்களுக்கு மேலாக இன்னொரு அமரரைப் பற்றி சொல்ல வேண்டாம். ஆனால் அவரைப் பற்றி நான் சொல்வதோ எழுதுவதோ அழகாகத் தெரியும். ஏனெனில் நானே எனது தந்தையாரைப் புகழ்வது புகழாகாது.

அமரர்கள் வரிசையில் ஆசிரியர்களை இரை மீட்ட நான் மேலும் ஒரே ஒரு அமரரை ஆசிரியர்களல்லாத தரத்தில் மீட்க வேண்டிய நிலையில் உள்ளேன். வேறு யாருமல்ல – முதலாம் வகுப்பு முதல் A/L வரை கல்லூரிகளில் கற்று சகல துறைகளிலும் பங்கு பற்றி தீயவர்களது மோதலில் தவறுதலாக அகப்பட்டு உயிர் துறந்து அமரர் கிருஸ்ணபிள்ளை ராஜ்குமாரே.

கல்லூரியிருந்து 500யார் தொலைவில் வீடமைந்ததால் 24 மணி நேரமும் கல்லூரியிலேயே காலம் கழித்து, கல்லூரிக்காக சகல துறைகளிலும் துடுப்பாகச் செயற்பட்ட நல்லதொரு நண்பன், சகபாடி, ராஜின் உருவமே எல்லோரையும் கவரவைக்கும். அது மட்டுமல்ல எதையும் துணிவாக செய்து முடிக்கும் ஆற்றலும், சாதுரியமும் என்றும் மறக்க முடியாது. எல்லாம் இறைவன் செயல். நடக்கவேண்டியவை அவ்வப்போது நடந்தே தீரும்.

நான் இங்கு இரை மீட்டது போல நீங்களும் இரை மீட்க ஆரம்பிப்பீர்கள் என்பது நம்பிக்கை. அடுத்த மலரில் உங்களது இரைகளை நாங்களும் சுவைக்க மீட்பீர்களாக.

**சி.றஜீவ்**

# என் கனவூர் கரவெட்டி

இடுப்பதனில் குடத்தை எடுத்து வரும் பெண்களின் கலகலப்பில்
கடுகவே தடம் பதித்து ஓடும் தண்ணி வண்டிலின் சலசலப்பில்
பொல பொல எனப் புலரும் காலையது - கரவைக்கு

தாமரைகள் தலையசைக்கும் அத்துளுக் குளத்தில் - தவளைகள்
தகதிமித் தாளமிடும் வெண்ணாரைகள் சிறகடிக்கும்
சோனப்பு வெளியில் காற்று கண்ணுக்கு மண்ணப்பும்
மாட்டு வண்டிச் சவாரியில் அப்புவும் துள்ளிடுவா் - கப்பூது வெளியில்
காற்று சால்வையால் கொடி அசைக்கும்.

வரண்ட நிலத்திலும் வளமாக வளரும் - வடலிகள்
பட்டத்து நூலைத் தலையசைத்து சிக்கெடுக்கும் - பனைகள்
தென்றல் காற்றின் இசைக்கு அசைந்தாடும் - தென்னைகள்
மாரி பொய்த்தாலும் பொய்க்காத வயல் வெளிகள்
எந்த வரட்சியிலும் வற்றாத உச்சில் குளம்

கோவில் சந்தையில் குப்பி விளக்கொளியில் - கொள்ளும்
பண்டமொன்றும் கொள்ளை விலை போகாது
வாசல் வேம்பின் கீழ் வாசிக்க நூலுடன்
ஈசிச்செயரில் சாய்ந்திருந்தால் A.C.யும் வேண்டாம்.
சொர்க்கம்தான் போங்கள்

அருள் புரியும் ஆலயங்கள் அடுத்தடுத்து விழாக் கோலம்
ஆமியால் மீண்ட மகனுக்காய் - அபிசேகம் தச்சந்தோப்பில்
கிறீன் காட் பெற்ற பேரனுக்காய் - கிராயில் காவடி
அம்மன் வருத்தம் வந்தால் - அத்துளு அம்மனில் பொங்கல்
கால் நடைகள் அல்லல் தீர்க்கும் - கணபதியான்
தில்லையம்பலத்தில் நெய் மணக்கும் மோதகம் வாயூறவைக்கும்.

சுண்டிக்குள இறாலுடன் சூடை மீனும் போட்டு
இலட்சுமிப் பேத்தி காய்ச்சிய கூழின் மணம் - அவா்
முற்றத்தில் சுற்றம் சூழ வைக்கும்.
தாயற்ற தங்கம் தாயாகிப்போனதால் பத்தியக் கறி சோறு
பக்கத்து வீட்டுக் கடப்புக் கடந்து வரும்.
கரவை மண்ணின் உப்புத் தண்ணி - உலகறியும்.
அதனால் போலும் அம்மக்கள் பாசத்தில் மட்டுமல்ல
ரோசத்திலும் குறைந்தவர்களல்ல.

கரை வெட்டி வந்த ஊரா?
காரைப் பற்றை வெட்டி வந்த ஊரா?
கரவை வெட்டிய ஊரா? - பெயர் வந்த காரணம்
சொல்லலாம் நூறு விதம்.

படித்த பள்ளியும் ஓடி விளையாடிய மண்ணும் - உய்ய
எண்ணியதால் அவர்கள் உலகெலாம் உயர்ந்து நிற்கின்றார்கள்.
ஊரின் மத்தியில் மக்கள் அத்துளு நீர்த் தாங்கியை
அண்ணாந்து பார்த்திடுவா்.
அத்துளுத் தாங்கியை மட்டுமல்ல
அவ்வூர் மக்களின் உயர்வையுந்தான்.

**கரவைக் கதிர்மகள்**

# மழை

**சி.கர்ணன்**

வானம் என்றைக்கும் இல்லாதவாறு இப்படிக் கறுத்துப் போய்க் கிடக்கிறது. எங்கட வாழ்க்கையும் இப்படித்தான் கறுத்து வெறுமையாய்....... எப்பத்தான் விடியுமோ...... மழை இடைவிடாது பெய்து கொண்டே இருந்தது. இது வரை கேட்ட மின்னலும், இடியோசையும் காணாது என்று இயற்கையும் சேர்ந்து இப்படித் தாண்டவம் ஆடுகிறது. " முற்பிறப்பில் என்ன பாவம் செய்தோமோ... கடவுளே... பொன்னப்புக் கிழவனின் புலம்பல். பல வேளைகளில் பள்ளிக்கூடப் பொடியளுக்கு பொன்னப்புவின் மாட்டு வண்டில் கூட இலேசான சவாரியாகத்தான் இருக்கும். தலைப்பாகையைக் கட்டிக் கொண்டு மாடுகளை விரட்டினார் எண்டால் அதுகள் சும்மா குதிரை மாதிரி பாஞ்சு பாஞ்சு போகும். எங்களுக்கு அது றொக்கற்றில சந்திர மண்டலம் போற மாதிரி இருக்கும். " அட மேன நான் உழைச்சாத்தான் எனக்கு சாப்பாடு... கடவுளோ தரப்போறார்......" என்று சொல்லும் பொன்னப்புவுக்கு இப்ப கடவுள்தான் தஞ்சம். பொன்னப்புவுக்கு மட்டுமல்ல ஆத்திகம் பேசினவ, நாத்திகம் பேசினவ எல்லோரும் இப்ப இப்படித்தான் நொந்து கொண்டிருக்கினம். எப்ப என்ன நடக்குமோ எது நடக்குமோ யாருக்குமே தெரியவில்லை. மழை மட்டும் விடாமல் பெய்து கொண்டிருந்தது.

மழை எண்டால் ஒரே குஷியாக ஓடி ஆடி விளையாடிக் கொண்டிருக்கும் பொடியள் எல்லாம் இப்ப மழைக்குக் கூடப் பயப்பிடுதுகள். பள்ளிக்கூடத்தால வரேக்க மழை எண்டால் ஒரே கொண்டாட்டம்தான். புத்தகங்களை வயித்துக்குள்ள வைச்சு சேட்டால் மூடிக் கொண்டு... சேட்டு மழைக் கவசம் எண்டு நினைப்பு. அப்படியே சண்டிக்குளம் நிறைஞ்சு, குளம் எங்க காணி எங்க எண்டு தெரியாமக் கிடக்கும். அது எங்களைச் சும்மா விடாது. பின்ன ஆலமரத்தில ஏறி ஒரு குதி குதிச்சாதான் அண்டைய பொழுது விடியும். அது என்ன பசுமையான நாட்கள்.

தாவாரத் தண்ணியில கப்பல் விட்ட நாட்கள். பக்கத்து வீட்டு மாதேவனுக்கும் எனக்கும் நடந்த கப்பல் போட்டிகள். அவன் வீட்டு வாசலில் இருந்து பார்த்துக் கொண்டிருப்பான் எப்ப என்ர கப்பல் வரும் அடிச்சு விழுத்துவன் எண்டு. அப்படி அறியாப்பராயம், தேவையில்லாத சண்டைகள். நானும் நீயும் கோபம் அதற்குப் பிறகு அவனைத் தூமை என்றழைப்பது... எத்தனை விசர்த்தனங்கள்.... இண்டைக்கு நாங்கள் ஊரில விளையாட்டுத் திருவிழாவுக்கு போடிற கொட்டில் மாதிரி வீடுகள் எல்லாம் அதுக்குள்ளேயே எல்லாம் அடக்கம். இப்படியே நாங்கள் வாழ்ந்தனாங்கள். சாமியறை, தாயறை எங்கள் வசதிக்கேற்ப அறைகளும், இப்ப எல்லாம் ஒண்டுதானே. காலங்கள்தான் எப்படி மாறிப் போய்க்கிடக்கிறது. ஒருத்தரும் நிம்மதியாய் படுப்பதில்லை. நாளைக்கு எழும்புவமோ என்பது கூடத் தெரியாத நிலையில் ஒவ்வொருவரும்.... எல்லோருடைய வாழ்க்கையும் இப்படித்தான் இருந்தாலும் இந்த வாழ்க்கை எங்கள் மீது திணிக்கப்பட்டுள்ளது. இப்போது பழக்கப்பட்டும் விட்டது. காலையில் யார் யார் இருக்கிறார்கள் என்று பார்ப்பதுதான் வழக்கமாகிவிட்டுது. எப்ப செல் வரும் யாருடைய உயிர் போகும் எண்டதுதான் நினைவாகிவிட்டது. இப்ப எல்லாம் ஒருத்தரும் பக்கத்து வீட்டுக் கதை , கோழ், புறணியம் சொல்வதற்கு நேரம் கிடைப்பதில்லை. எல்லோருக்கும் மரண பயம். இதுதான் மரணத்துள் வாழ்வதா என்ற கேள்வி எனக்கு அடிக்கடி எழும்.

இப்போதெல்லாம் எல்லோருக்கும் ஒரே வாழ்வுதான். நான் பெரிசு.. நீ பெரிசு, நான் கல் வீடு.... நீ மண் வீடு, நான் பணக்காரன், நீ ஏழை சாதி பேதம்... மதபேதம்....எதுவுமே இல்லாத வாழ்க்கை. எல்லோருக்கும் ஏக்கமும், கவலையும், தவிப்பும் நிறைந்த

வாழ்க்கை... இப்போதெல்லாம் வாழ்வே சுமையாகிவிட்டது. வாழ்க்கையே கடமையாகி விட்டது.

ஆடி ஓடிப் பம்பரமாய்த் திரிந்தவர்கள் கூட அடங்கி ஒடுங்கி மூலையில் முன்னால் வீட்டுச் சரசக்காவின் பொடியன் நல்ல வடிவு... வெள்ளையும் கூட, எங்கட ஊரில் நல்ல தண்ணிக்குத் தட்டுப்பாடு கன தூரம் போக வேணும். இருந்தாலும் அவ குடம் குடமாகச் சுமந்து வந்து நல்ல தண்ணில மகனைக் குளிப்பாட்டி கண்ணூறு பட்டுப் போகும் எண்டு கறுப்புப் பொட்டும் வைச்சு விடுவா.

அவனுக்கு இப்ப பன்னிரண்டு வயதிருக்கும். ஒரு மூலையில் ஒடுங்கி இருந்தாள். வாய் ஓயாமல் எல்லோருக்கும் கிண்டல் அடிச்சுப் பகிடி விடும் அவன் இப்போது மௌனமாக.... குளப்படிக்குப் பிறந்தவன் எண்டு எல்லோரும் செல்லமாகக் கண்டிக்கும் அவன் ஒருவரோடும் பேசாமல் பெரும்பாலும் தனியாகவே..... கணபதி அண்ணன் வேலிக்கு வரம்பு கட்டி காலால மிதிச்சு மம்பட்டிப் பிடியால இடிச்சு அழகு பார்ப்பார். இவனுக்கு அவரைச் சீண்டிப் பார்க்க விருப்பம். இவன் அதை எல்லாம் எட்டி உதைச்சு உழக்கி விடுவான். கணபதி அண்ணனும் இவன்ர காலடி மண்ணெடுத்துப் பாம்புப் பொந்துக்கு போட்டு காலழுகி விடும் என்று வெருட்டியும் பார்த்தார். பலனில்லை. கடைசியாக மருந்தாக நாகதாளி முள்ளை மறைச்சு வைத்துப் பார்த்தார். அவன் முள்ளிள்ளாத இடமாகப் பார்த்து உழக்கி விடுவான். அப்போது கணபதி அண்ணணின் வலி தெரியவில்லை. அறியாப்பராயம் விளையாட்டாக இருந்தது. இப்படி எல்லாம் விளையாடித் திரிந்த இவன் அழகழகாக எண்ணை வைச்சு தலை சீவி அழகு பார்த்த சரசக்காவின்ர பொடியன்.... இப்படி மௌனமாக ஓடாத சில்லு மாதிரி.

பொன்னப்புதான் சொன்னார் நேற்றைக்கு திடீரென்று அடிச்ச செல்லில சரசக்கா பெடியனை பங்கருக்குள்ள தள்ளிப்போட்டு அவ மெள்ளமாக போட்டாவாம். மகனைக் காப்பாற்றி விட்ட நிம்மதியில் விழுந்த செல் அவளது காலையும் கொண்டு போட்டுதாம். அதுதான் அவன் தாயையும் இழந்து போட்டு இந்த வாழ்க்கையை இந்தப் பாழாய்ப் போன உலகத்தை நினைச்சு அவன் ஒருவருடனும் பேசுவதில்லையாம். கணபதி அண்ணை கூடத்தான் திட்டினதாலதான் இப்படி நடந்து போச்சோ எண்டு கவலைப்பட்டாராம்.

யாரால்தான் ஏற்றுக் கொள்ள முடியும். இத்தனை இழப்புக்களை, தவிப்புக்களை, ஏக்கங்களை அடுத்த ஒருவேளை சோற்றுக்காக மக்கள் ஏங்கிய காலம் போய் அடுத்த வேளை உயிருடன் இருப்போமோ என்கின்ற ஏக்கம்தான் எல்லோரிடமும் இருந்தது. இன்னும்தான் இரட்சகர்கள் வரவில்லையே நாம் இழந்தது போதாதா? இனி இழப்பதற்கு என்ன இருக்கிறது கட்டிய கோவணத்தைத் தவிர.

இண்டைக்கு காலை இழந்து ஊனமாகப் போன போது சரசக்காவின்ர பொடியன் மாத்திரமல்ல எத்தனை எத்தனை சரசக்காவின்ர பொடியன்களை, பேச்சுக்களை, மூச்சுக்களை, சொந்தங்களை, சொத்துக்களை, இன்பங்களை இழந்து தவிக்கின்ற தவிப்புக்கள் எல்லாம் எப்போது முடிவுக்கு வரும். மொத்த தமிழினமே ஏதோ ஒருவகையில் எதையாவது இழந்துதான் இருக்கிறது. மக்களின் மனங்களில் வெறுமையே நிறைந்து நிற்கிறது. இந்தப் பரந்த உலகில் மனிதன் முன்னேறிக் கொண்டிருக்கின்ற நாங்கள் மட்டும் இழப்புகளையே சொந்தமாக்கிக் கொண்டிருக்கிறோம்.

எங்கள் வீட்டு முற்றத்திலும் முல்லை மலர் பூக்குமா? மழை இன்று இடைவிடாது பேரிரைச்சலாகவும் பெய்து கொண்டிருக்கிறது.

# வடமராட்சிப் பிரதேச இலக்கிய வளர்ச்சி

சில ஆரம்பக் குறிப்புக்கள்:
கலாநிதி.செ.யோகராசா,
கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

## 1.மரபுசார் இலக்கிய வளர்ச்சி

வடமராட்சிப் பிரதேச மரபு சார்ந்த இலக்கிய வளர்ச்சியில் செய்யுள் இலக்கிய வளர்ச்சிக்கே முதன்மை இடமளிக்கப்பட்டுள்ளது. இத்தகைய செய்யுள் இலக்கிய மரபில் கோயில்கள் மீது பாடப்படுகின்ற பல்வேறுவகையான பிரபந்தங்கள் முக்கிய இடம்பெற்றுள்ளன. அவை தவிர, பிரபுக்கள், வள்ளல்கள், பெரியார்கள் மீதும் அவை பாடப்பட்டன. இவ்வாறான பிரபந்தங்களை அதிகம் பாடிய ஈழத்தவரான வடமராட்சி சார்ந்த உடுப்பிட்டிச் சிவசம்புப் புலவரே(1852-1910) புலோலி.நா.கதிரவேற்பிள்ளை(1884-1904), கரவை ச.பொன்னம்பல உபாத்தியாயர்(1881-1931) பருத்தித்துறை முத்துக்குமாரசாமிக் குருக்கள்(1853-1936), கரவை.பொ.கார்த்திகேசுப் பண்டிதர், வதிரி.சி.தாமோதரம்பிள்ளை(1863-1921), க.சிற்றம்பல உபாத்தியாயர், சைவப்புலவர் சி.வல்லிபுரம், பண்டிதர்.க.சின்னத்தம்பி, க.கணபதிப்பிள்ளை, அல்வையூர்.மு.செல்லையா, பண்டிதர்.ஆ.தங்கவேல், பண்டிதர்.க.வீரகத்தி(கவி), மன்னவன் கந்தப்பு, பிள்ளைக்கவி.வ.சிவராஜசிங்கம் முதலாக இன்றுவரை தொடர்ந்து வருகின்ற நீண்ட, வளமான செய்யுள் இலக்கியப் பாரம்பரியம் கொண்டது. வடமராட்சிப் பாரம்பரியமென்பதில் தவறில்லை.

மேற்குறிப்பிட்டோருள் முதன்மையானவராக உடுப்பிட்டி சிவசம்புப் புலவர் அதிக எண்ணிக்கையில் பாடியவர் மட்டுமன்றி, $19^{ம்}$ நூற்றாண்டு தமிழ் இலக்கிய வரலாற்றில் அவ்விதத்தில் சிறப்பிடம் பெறுகின்ற தமிழ்நாட்டு மீனாட்சி சுந்தரம் பிள்ளைக்கு நிகரானவரென்பதும் குறிப்பிடத்தக்கது.

இப்பாரம்பரியத்திலே வந்த $20^{ம்}$ நூற்றாண்டுப் புலவர்கள் சிலர் முன்னையோரை விடப் பக்திச் சுவைநனி சொட்டச் சொட்ட பாடியோராகவுமுள்ளமை கவனிக்கத்தக்கது. சிறந்த உதாரணமாக உள்ளவர் பிள்ளைக் கவி.வ.சிவராஜசிங்கமென்பது மிகையாகாது. வேறு சில புலவர்களும், கவிஞர்களும் தமது பக்திப் பாடல்களை தமது பக்திப் பாடல்களுடே தமது சமூக நோக்கு, முற்போக்கான சிந்தனைகள், அங்கதப் பார்வை முதலானவற்றை வெளிப்படுத்தியிருப்பதும் கவனிக்கத்தக்கதே. கவீயின் கவிதைகள் அத்தகையவற்றுள் சிறப்பிடம் பெறுவன.

## 2.சரமகவிப் பாரம்பரியம்

மரணித்தோர் நினைவாகச் சரமகவி பாடுகின்ற நீண்டதொரு பாரம்பரியம் குறிப்பாக யாழ்ப்பாணப் பிரதேசத்திற்குண்டு. இத்தகைய சரம கவிதைகள் பெரும்பாலும் வாய்ப்பாட்டுத் தன்மை கொண்டனவாயினும் அவற்றுடைய கவிநயம் மிக்க பாடல்கள் தருவோருமுள்ளனர். கிருஸ்ணாழ்வார் இவ்விதத்தில் குறிப்பிடத்தக்கவராவர். ஏ-டு:

முற்றத்து மண் சோறாய் மூன்றூமல்(க்)காய் அடுப்பாய்
பற்றிய பாவட்டையிலை பாற்கறியாய் - பெற்ற வித்துச்
சாப்பிடவா அப்பா சமைத்த உணவாறுதென்று
கூப்பிடுவ(து) ஆரை இனிக் கூறு

**3.கூத்துப் பாடல்**

கூத்துக்களின் போது, இடைவேளை நேரங்களில்(கூத்துக்களோடு தொடர்புபடாத) பாடல்கள் பாடுகின்ற மரபொன்று நடைமுறையில் இருந்துள்ளது. இத்தகைய பாடல்கள் சமூகச் சீர்திருத்த நோக்குடையனவாக வெளிப்படுவதுமுண்டு. பாரம்பரியக் கவிதைப் போக்குகளிளொன்றாக இதனையும் எடுப்பதில் தவறில்லை. இவ்வாறான பாடல்கள் பாடியோர்களுள் சிறப்பாகக் குறிப்பிடத்தக்க ஒருவர் கிருஸ்ணாழ்வார். பவளக்கொடி நாடகத்திலே அன்னார் பறையனாக வந்து பாடலினொரு பகுதி, பின்வருவது:

நாயும் நரியும் பிடுங்காமல் - பிணம்
நாற்றம் எடுத்து மணக்காமல்
அங்கம் நீறாக்குவது நாங்களோ – வீணில்
அதிகாரம் செய்வது நீங்களோ?

**4.நவீன இலக்கிய வளர்ச்சி**

**4.1நவீன கவிதை**

**4.2நவீன கவிதை ஊற்றுக்கள்**

ஈழத்தில் நவீன கவிதை 1840களவில் முகிழ்த்ததாயினும் நவீன கவிதைக்கான ஊற்றுக்கள் முன்பே வெளிப்பட ஆரம்பித்துள்ளன. வடமராட்சி இலக்கிய பாரம்பரியத்திலும் இத்தகைய ஊற்றுக்களை இனங்காண முடியும்.

முற்குறிப்பிட்ட வல்வெட்டித்துறை குமாரசுவாமி முதலியார்(1791-1874) இயற்றிய கோதாரி நோய் பற்றிய பாடல்கள் எழுந்ததாயின் சமூக உணர்வும் அவற்றில் இழையோடியுள்ளது. அல்வையூர் செல்லையா, யாழ்ப்பாணன், க.சச்சிதானந்தன்(பருத்தித்துறை), கவீ(பண்டிதர்.க.வீரகத்தி) முதலானோரின் ஆக்கங்களிலும் நவீன கவிதைக்குரிய சில பண்புகள் இடம்பெற்றிருப்பதை அவதானித்திருக்கிறோம். இவ்வித்தில் தமிழ்மொழி பற்றி க.சச்சிதானந்தன் எழுதிய கவிதையின் ஒருபகுதியை எடுத்தாள்வது அவசியமானது. அது பின்வருமாறு:

"சாவினிலும் தமிழ் படித்துச் சாக வேண்டும் - என்றன்
சாம்பல் தமிழ் மணந்து வேக வேண்டும்"

மேலுள்ள பகுதியை இங்கு எடுத்தாளக் காரணம் சச்சிதானந்தன் பாடிய இக்கவிதையை ஆய்வாளர், ஆர்வலர் பலர் பாரதிதாசன் பாடியதாகவோ நாமக்கல் இராமலிங்கம்பிள்ளை பாடியதாகவோ கருதுவதுதான். இராஜபாரதி, யுவன் ஆகிய ஈழத்து கவிஞர்களும் மேற்கூறிய அடிகளை நினைவுபடுத்துவது போல் எழுதியிருப்பது காரணமாக, அவர்கள் எழுதியிருப்பதாக கருதப்படும் வழக்கமுள்ளது. காசி ஆனந்தன் பாடியதாகக் கருதுவோருமுள்ளனர். (விரிவான விளக்கத்திற்கு, மல்லிகை – ஜனவரி 2005 இதழினைப் பார்க்க)

'கவீ' எழுதிய கவிதைகளிலும் நவீன கவிதை ஊற்றுக்கு எடுத்துக் காட்டாகக் கூடியவை.

உ-ம்:

"எந்த மொழி அகராதியிலும் - கேவலம்
ஏழை என்னும் வார்த்தை ஒழியட்டுமே!"
"நாலு பத்து மனிதர் மனிதர் கையில்
நாட்டுவளம் குவிந்திடும்
சீலம் அற்ற ஆட்சி நீதி

சின்ன பின்னம் ஆக்குவோம்."
"கற்றல் அறியா மூளை பிறர்முன்
கையைக் கட்டி நிற்குது.
கற்கும் மூளை தொட்டதெல்லாம்
கைமேல் பலன் காணுது.
இந்த வழியில் உனது வாழ்வின்
இருட்டும் நிலவும் இருக்குது.
சொந்தமாச் சிந்தனை செய்
சொர்க்க வாசல் காணலாம்."

**4.1.2நவீன கவிதை வளர்ச்சி**

ஈழத்தில் நவீன கவிதையின் தோற்றம் நாற்பதுகள் அளவிலேயே நிகழ்ந்ததாயினும் வடமராட்சியைப் பொறுத்த வரையில் அறுபதுகளே அவ்விதத்தில் முக்கிய காலப்பகுதியாகக் காணப்படுகிறது. இக்காலப்பகுதியில் ஈழத்து நவீன துறையில் முற்போக்கு கவிஞர்களுள் முக்கியமானவராக கருதப்படும் பசுபதி வடமராட்சி சார்ந்தவரே என்பது முதற்கண் குறிப்பிடத்தக்கதாகிறது. சுபத்திரனின் பிரபல்யமான கவிதையொன்றின் ஆரம்பம் பின்வருமாறு:

"சாதியென்னும் கொடுமையினால் தமிழர் கூட்டம்
சஞ்சலத்தில் வீழ்ந்ததடா சகதியாகி!
ஆதியிலே ஒரு சாதி இருந்ததென்பர்
அந்த நெறி இந்நாளில் காணுவதில்லை."

எழுபதுகளளவில் புதுக்கவிதை வெள்ளமாகப் பிரவாகித்துப் பரவிய சூழலில் நவீன கவிதையின் ஆதிக்கம் வீழ்ச்சி எய்திய நிலையில் ஏனைய பிரதேசங்கள் போல் வடமராட்சியிலும் நவீன வளர்ச்சிப் போக்கு தளர்ச்சி காண்கிறது.
ஆயினும், ஈழமேகம், ச.முருகானந்தன் முதலானோர் அவ்வாறான கவிதைளை குறிப்பாக தொண்ணூறுகளில் எழுத முற்பட்டமை நினைவு கூரத்தக்கது. சரிநிகரில் இடம் பெற்ற இவரது கவிதைகள் வெண்பா வடிவில் அங்கதம் இழையோட, ஈழத்து சமகால அரசியல் நிகழ்வுகளை விமர்சிப்பதாக வெளிப்பட்டமை இலக்கி ஆர்வலர் பலருமறியாததொன்று. எ-டு:

"எல்லாம் சரிதான் இனியென்ன சந்திரிகா
நல்லாள் வந்துவிட்டாள் நமையாள் - பொல்லார்
போய்த் தொலைய பூமியெல்லாம் பூப்பூக்கும் புளுகோதி
நாயவாலும் நிமிர்ந்து எழும்."

ஆயினும், நூலுருப் பெறாத நிலையில் பரவலாக அறியப்படாவிடினும் அறுபதுகள் தொடக்கம் நவீன கவிதை எழுதி வந்துள்ள பலரை வடமராட்சி கண்டு வந்துள்ளது. இவ்விதத்தில் இவ்வேளை நினைவிற்கு வருபவர்களுள் அல்வைச்சுந்தரன், கருணையோகன், ச.திரவியம், கணமகேஸ்வரன், சிவலிங்கராசா முதலானோர் நினைவிற்கு வருகின்றனர். இத்தகைய அண்மைக்கால தலைமுறையினருள் இ.சு.முரளீதரன், முரளீஸ்வரன் ஆகியோர் காவியங்கள் எழுதியிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

### 4.1.3புதுக் கவிதை வளர்ச்சி

முற்குறிப்பிட்டது போன்று ஈழத்திலே எழுபதுகள் தொடக்கம் புதுக்கவிதை பரவலாக வளர்ச்சி காணத் தொடங்கவிட்டதாயினும், வடமராட்சியைப் பொறுத்த வரையில் தொண்ணூறுகள் தொடக்கமான கவிஞர்களே இவ்வேளை நினைவிற்கு வருகின்றனர். இவர்களில் முதலில் வைத்தெண்ணத்தக்கவர் நட்சத்திரன் செவ்விந்தியன். போர்க்கால போராட்டச் சூழலில் புதிய இளந்தலைமுறை எதிர் நோக்கிய புதிய பல பிரச்சனைகள், அவலங்கள், ஏமாற்றங்கள், குழப்பங்கள் முதலியனவற்றை தனித்துவமான எடுத்துரைப்பு முறையில் (எ-டு: வசன நடைக்கு அண்மிக்கத்தக்கதான வெளிப்பாடு) வெளிப்படுத்தி ஆய்வாளர் பலரைத் தன்பக்கம் ஈர்த்தவர் இவர். (தற்போதைய அவுஸ்ரேலிய நாட்டுவாசி).

இத்தகையோர் பரம்பரையில் தொடர்ந்து வந்தவர்களுள் துவாரகன், சுதர்சன், விஷ்ணு, முரளீதரன், கருணை ரவி, அஜந்த குமார், இராகவன் என நீண்டதோர் பட்டியலுண்டு. பொலிகையூர் சு.க.சிந்துதாசன், அகியோபி, பெரிய ஐங்கரன் முதலானோரும் இவ்வரிசையில் இணைபவரே. இவர்களுள் ஐவரது கவிதைகள் பற்றி மட்டும் உதாரணங்களுடன் இவ்வேளை எடுத்துரைக்க முற்படுகின்றேன்.

துவாரகனின் கவிதைகளில் புதிய படிமங்கள், புதிய சொற்சேர்க்கைகள், சாட்சிப்படுத்தல்கள், நுண் சித்திரிப்பு முதலான பண்புகளுடன் சமகால, சமூக அரசியல் நிலைமைகள் வெளிப்படுகின்றன.

உ-ம்:

ஒரு மரணம் சகுனம் பார்க்கிறது
"நடந்து செல்லும் வயல் வரம்புகளில்
படுத்திருக்கும் பாம்புகள் போல
வீதிகளின் வெளியெங்கும்
பதுங்கியிருக்கிறது மரணம்.
கலகலப்பான மழலைக் குரல்களையும்
தம் நீண்ட பிரிவின் பின்னான
உறவுகளையும்
தம் கடமை முடிக்கவிரையும்
எல்லோரையும் தோற்கடித்து
வெடித்துச் சிதறடிக்கும்
ஒரு வெடி குண்டைப் போல்
காத்திருக்கிறது மரணம்.
பெரு வீதிகளிலும்
சந்திகளிலும்
ஒழுங்கைகளிலும்
பாலங்களுக்கு அடியிலும்
பதுங்கியிருந்து
தன் இரத்தம் குடிக்கும் கோரப் பற்களுடன்.
பிணந் தின்னும் கழுகு போல்
எங்கும் காத்திருக்கிறது.....

சுதர்சனின் கவிதைகளில் சமகால அவலங்கள் எளிமை, நளினம், ஆழம் கொண்ட சொற்களோடு இடம் பெறுகின்றன. உ-ம்:

"நேற்றுப் போலில்லை

அந்தவொரு
கிளுவை மரஇலைகள்
உடைத்துப் போடுமுன்
நிலா ஒளி
அதன் மேல்
பிய்ந்து
அசையும் மெல்ல
மனித நிழல்
கிடுகு வேலியின்
சரசரப்பு
'சர்' என்று சொரியும்
கறையானின் மண்
அவளுக்கு
ஆட்காட்டிக் குருவிகளாய்
மகனுக்காய்
மண் சட்டியில்
அவித்த
மரவெள்ளிக் கிழங்கோடு
இந்த இரவிலும்
வழமை போல்
ச் ச் ச்
பல்லி மட்டும் சொல்லியது
'இனிப் படைக்க வேண்டியதுதான்'

ஏனைய கவிஞர்களை விட, சம காலத்தில் பெண்கள் அனுபவித்து வரும் வெவ்வேறுபட்ட துயரங்களும் பல்வேறு கோணங்களில் இவரது கவிதைகளில் வெளிப்படுவதும் குறிப்பிடத்தக்கதே.
சமகால வாழ்வியலின் பன்முகக் கோலங்களையும் மிக இயல்பான முறையில் உள்ளார்ந்த ஓசையுடன் தமது கவிதைகளில் வெளிப்படுத்துபவர் இராஜேஸ் கண்ணன்.
ஈழத்தில் 'கைக்கூ' கவிதைகள் எழுதுகின்ற கவிஞர்கள் அவர்கள் பற்றிய தனி ஆய்விற்கு இடமுண்டு – பெருகி வருகின்ற நிலையில் இப்பிரதேசக் கவிஞர்களுள் அவ்வடிவத்தை திறம்படக் கையாள்பவர்களாக இ.அ.முரளீதரன் காணப்படுகின்றார்.
உ-ம்:
தெரு மணலில்
சப்பாத்துக் காலடிகள்
எவரை இழந்ததோ கிராமம்.
காற்றே வீசாதே
பூ மர நிழலில்
அகதிகளின் கஞ்சிப் பானை
நாய் குரைக்கும் இரவு
திடுக்கிடும் தென்னங்குருத்துக்கள்
விடியலில் தோரணமா?

பின் நவீனத்துவ நோக்கிலான கவிதைப் போக்குப் பெருகி வரும் அண்மைக்கால ஈழத்துக் கவிதைச் சூழலில், கிழக்கில் அவ்வாறான கவிஞர்கள் பலர் வெளிப்பட, வடக்கில் ஒரு சிலரே அவ்வாறான கவிதைகள் எழுத முற்படுகின்றனர். இவ்விதத்தில் இப்பிரதேசக் கவிஞரான இராகவனின் கவிதைகள் விதந்துரைக்கத்தக்கன!

**4.2சிறுகதை வளர்ச்சி**

ஈழத்தில் முப்பதுகளில் சிறுகதை முயற்சிக்கு கால்கோளிடப்படுகிறது. அக்கால முன்னோடிகளாக இலங்கையர் கோன், சி.வைத்திலிங்கம், சம்பந்தன் ஆகியோரே அண்மைக்காலம் வரையும் கவனிப்பிற்கு உள்ளாகி வந்துள்ளனர். ஆயினும், அத்தகையோருள் ஒருவராக மிக அண்மைக்காலத்தில் இனங் காணப்பட்ட ஒருவரான ஆனந்தன் இப்பிரதேசம் சார்ந்தவரே ( அவர் ஒரு கவிஞரென்ற விதத்தில் ஏலவே இங்கு குறிப்பிடப்பட்டுள்ளார்) அவர் சமகாலச் சமூகப் பிரச்சனைகளுக்கு முதன்மை கொடுத்து எழுதியமை ஏனைய எழுத்தாளர்களிடமிருந்து அவரை வேறுபடுத்தி முக்கியப்படுத்துவது மனங்கொள்ளத்தக்கது.

நாற்பதுகளிலேயே மண்வாசனை கொண்ட சிறுகதைகளை எழுத முற்பட்டனர். மறுமலர்ச்சிக் கால எழுத்தாளர்கள். (இது பற்றியும் அண்மைக்காலத்திலேயே பரவலாக அறிய நேர்ந்தது). இத்தகையோர் வரிசையில் முக்கியமான ஒருவராகவும், மறுமலர்ச்சியில் அதிக சிறுகதை எழுதியவராகவும் உள்ளவர் என்ற விதத்தில் முக்கியமானவராகின்றார்.(புலோலி) கு.பெரியதம்பி யதார்த்தப் பார்வை, கூர்மையான அவதானிப்பு, செறிவு முதலான இயல்புகள் மிக்கவை இவரது படைப்பக்கள் என்பது மிகையாகாது.

அறுபதுகளிலேயே ஈழத்துச் சிறுகதையுலகில் முற்போக்கு எழுத்தாளர் குழாம் செல்வாக்குற்ற போது, அக்காலப்பகுதியில் சற்று முன்பின்னாக வடமராட்சியிலிருந்து வெளியிட்ட முற்போக்கு எழுத்தாளர்களுள் என்.கே.ரகுநாதன், தெணியான், ஈழத்துச் சோமு, செ.கதிர்காமநாதன் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்களாவர். இவர்களுள் தெணியான் தீவிரமான மார்க்கசிய நோக்குடன் இன்றுவரை சிறுகதைகள் எழுதி வர, வடமராட்சி கிராம வாழ்வியலை மண்வாசனை நன்கு கமழ கலாபூர்வமான முறையில் எழுதிய பெருமைக்குரியவர் இளமையில் மறைந்த எழுத்தாளரான செ.கதிர்காமநாதன்.

கலாபூர்வமான முறையில் எழுதுகின்ற முற்போக்கு எழுத்தாளர் வரிசையில் எழுபதுகளிலேயே எழுத ஆரம்பித்த நந்தினி சேவியரும் கவனிக்கப்பட வேண்டியவர். அதிகமெழுதாவிடினும் யதார்த்த பூர்வமான முறையில் ஆனால் அங்கம் இழையோட, சுவையான முறையில் கலாபூர்வம் மிக்க சிறுகதையெழுதியவர்கள் பலராலும் அறியப்படாத ஆனந்த மயில். (மிக அண்மையிலேயே இவரது சிறுகதைகள் தொகுப்புருப் பெற்றன.)

புலோலியூர் சதாசிவம், வடமராட்சிக் கிராமங்கள், கொழும்பு நகரம், மலையகம் ஆகிய வெவ்வேறுபட்ட களங்களையும் பின்புலமாகக் கொண்ட படைப்புகளைத் தந்த பெருமைக்குரியவர்: அவ்வாறே, சிங்கள, முஸ்லிம், மலையக மக்களது பேச்சு மொழியை உயிர்ப்புடன் கையாண்டவரும் கூட. பல விடயங்கள் பற்றியும் எழுதியிருப்பினும் பெண்களது அவலங்களை அதிகமாக எழுதியவர் என்ற விதத்தில் கவனத்திற்குரியவர் புலோலியூர் கந்தசாமி.

எண்பதுகள் தொடக்கமான, போர்க்கால, போராட்ட வாழ்வியலைப் பற்றி எழுதிய எழுத்தாளர்களாக பலரிருப்பது யாமறிந்ததே. எனினும், இவர்களது பலரது

படைப்புக்களும், விவரணங்களாகவோ, நிகழ்ச்சித் தொகுப்புகளாகவோ, பதிவுகளாகவோ, உற்பத்தித் தன்மை பெற்றனவாகவோதான் காணப்படுகின்றன. இத்தகைய ஆரோக்கியமற்ற சூழலில் புறம் தழுவிய அக உணர்ச்சிகளுக்கு முக்கியம் கொடுத்து கலாபூர்வமான முறையில் சிறுகதை எழுதிய மிகச் சிலருள் முதன்மையானவர் ரஞ்சன்குமார். இவர் இப்பிரதேசம் சார்ந்தவரே.

புலோலியூர் இரத்தினவேலோன் தான் கண்டனவற்றையும் தன் அனுபவங்களையும் அநாயசமான முறையிலும் சுவையாகவும் சொல்ல வல்லவர். (முற்குறிப்பிட்ட கண.மகேஸ்வரின் சிறுகதைகளும் இத்தகைய இயல்புடையனவே)

மேற்கூறியோர் தவிர, த.கலாமணி, ந.பார்த்திபன், நவம், வல்வை ஆனந்தராஜ், ச.முருகானந்தன், புலோலியூர் தம்பையா, ராஜ.ஸ்ரீகாந்தன், நெல்லை.க.பேரன் முதலியோர் இப்பிரதேச ஆய்வுக்குட்பட வேண்டிய எழுத்தாளர்களாகின்றனர்.

எண்ணிக்கையில் அதிகமில்லாவிடினும் முக்கியமான பெண் எழுத்தாளர்கள் சிலர் வடமராட்சியில் வெளிப்பட்டுள்ளனர். ஐம்பதுகளில் எழுத ஆரம்பித்த குந்தவை தொடக்கம் பின்னர் ஒவ்வொரு காலப்பகுதியிலும் சிதம்பர பத்தினி, சந்திரகாந்தா முருகானந்தன்( மிக அண்மையில்) கார்த்திகா பாலசுந்தரம் முதலான எழுத்தாளர்கள் சிலர் இத்துறைக்கு வந்துள்ளனர்.

வடமராட்சி சார்ந்த புகலிட எழுத்தாளர்களாக மிகச் சிலரே நினைவிற்கு வருகின்றனர். கே.எஸ்.துரை, லதா முதலானோர் அவர்களுள் சிலர். புகலிடத் தமிழரது வீண் ஆடம்பரவாழ்க்கை, போலி ஆசாரங்கள் என்பன அங்கதம் விரவ கே.எஸ்.துரையின் சிறுகதைகளில் வெளிப்படுகின்றன. பெண்களது பிரச்சனைகள் அகப் போராட்டங்கள் ஊடாக லதாவின் சில சிறுகதைகளில் இடம் பெற்றுள்ளன.

### 4.3நாவல் வளர்ச்சி

ஈழத்து நாவல் வளர்ச்சி ஓட்டத்தினுள் ஏறத்தாழ நாற்பதுகளளவிலேயே வடமராட்சி சேர்த்துக் கொள்கின்றதெனலாம். (முற்குறிப்பிட்ட) ஆனந்தன் எழுதிய அன்னபூரணி என்ற நாவலே இவ்விதம் கவனம் பெறுகின்றது. பின்னர் 70களில் வீரகேசரி நிறுவனம் மாதமொரு நாவலை வெளியிட்டு வந்த சூழலில் இப்பிரதேச எழுத்தாளர் பலர் நாவலாசிரியர்களாகின்றனர்.

இக்காலம் தொடக்கம் நாவல்கள் எழுதி வந்த எழுத்தாளர்களுள் தெணியான் குறிப்பிடத்தக்கவர். இக்காலப்பகுதியில் எழுதிய விடிவை நோக்கி நாவலும், பின்னரெழுதிய கழுகுகள், பரம்பரை அகதிகள், சிதைவுகள், முதலியனவும் சாதிப்பிரச்சனைகளை வெவ்வேறு கோணங்களில் அணுகுபவை, நிலப் பிரபுத்துவ சமூகத்தின் சரிவை சிறந்த பாத்திர சிருஷ்டிகளுடன் வெளிப்படுத்துவது 'மரக்கொக்கு'. பிராமணக் குடும்பத்தின் நசிவை அநாதரவான நிலையை தத்ருபமாக வெளிப்படுத்துவது 'பொற்சிறையில் வாழும் புனிதர்கள். குடும்ப உறவுச் சிக்கல்களை உளவியல் ரீதியில் அணுகும் 'காத்திருப்பு' அன்பிற்காக ஏங்கும் மனிதனொருவன் பற்றிய 'கானலில் மான' என்பன தெணியான் கலாபூர்வமான படைப்புக்களென்ற விதத்தில் பாராட்டுதல்களையும் பெற்றவை.

70களில் அறிமுகமான பிறிதொரு எழுத்தாளரான ஏ.ரி.நித்தியகீர்த்தியின் 'மீட்டாத வீணை' சீதனப் பிரச்சனையைப் பற்றி ஆழமாகப் பார்ப்பதோடு (ஈழப்பிரச்சனை பற்றி எழுதியோர் குறைவு) மண்வாசனை மணத்தோடும் வெளிப்பட்டுள்ளது. பொ.பத்மநாதனின் நாவல்கள் குடும்ப, உளவியல் சார் பிரச்சனைகள் பற்றியும்(உ-ம்:யாத்தரை, புயலுக்குப் பின்), குடும்ப வறுமை பற்றியும் (உ-ம் பொன்னம்மாவின் பிள்ளைகள்) பேசுகின்றனவாம்.

தெணியானின் 'பொற்சிறையில் வாடும் புனிதர்கள்' போன்ற பிராமணச் சமூகத்தின் நலிவைக் காட்டுகின்ற பிறிதொரு நாவல் நா.சோமகாந்தனின் 'விடிவெள்ளி பூத்தது' புலோலியூர் சதாசிவம் எழுதியுள்ள நாவல்களுள் 'மூட்டத்தினுள்ளே' மலையகப் பிண்ணனியைக் களமாகாக் கொண்டுள்ளது. அத்தகைய பிறிதொரு நாவலும் 'லயத்துச் சிறைகள்' என்று நினைக்கிறேன். இவரால் எழுதப்பட்டது.

மத்திய கிழக்கு நாடொன்றில் பணிபுரிகின்ற இளைஞனொருவனின் குறுகிய கால அனுபவங்களை ஓரளவு வெளிப்படுத்த முயல்கிறது. நெல்லை.க.பேரனின் 'விமானங்கள் மீண்டும் வரும் குறைபாடுகள்' சில காணப்படினும் இவ்விடயம் பற்றிய முதல் நூல் என்ற முக்கியத்துவம் இதற்குண்டு.

ஆழமான பார்வை இல்லாவிடினும் பல்வேறு சமகாலப் பிரச்சனைகள் பற்றி அதிக நாவல்கள் எழுதி வருகின்ற சோ.ராமேஸ்வரனும் இப்பிரதேசம் சார்ந்த எழுத்தாளரே. ச.முருகானந்தன், வில்வை ஆனந்தராஜ் ஆகியோர் நாவல்கள் எழுதியிருப்பினும் அவை இவ்வேளை எனது பார்வைக்கு கிட்டவில்லை.

வடமராட்சி சார்ந்த புகலிட நாவலாசிரியராக கே.எஸ்.துரை மட்டுமே இவ்வேளை நினைவிற்கு வருகின்றார். இவரெழுதிய இரு நாவல்களும் முக்கியமானவையாகும். இவற்றுளொன்றான சுயம்வரம் டென்மார்க் வடமராட்சிக் கிராமமொன்று என இரு பிரதேசங்களில் நிகழ்கின்றது. நற்பண்பு மிக்க டென்மார்க குடும்பமொன்றைச் சுற்றியும் போர்க்கோலம் கொண்டுள்ள அதற்கான முயற்சிகளில் தாமாகவே ஈடுபடுகின்ற வடமராட்சிக் கிராமமொன்றிலுள்ள குடும்பங்களைச்சுற்றியும் சூழல்கின்ற இந்நாவல் பிரதேச மணம் கமழும் நாவலென்ற விதத்திலும் முக்கியமானது. இவரது மற்றொரு நாவலான 'ஒரு பூ' போராட்டத்திலே மகனைப் பறி கொடுத்த தாயின் மனப்போராட்டங்களை நுட்பமாக வெளிப்படுத்துகின்றது. இவ்விரு நாவல்களும் கலாபூர்வமான சிருஷ்டிகள் என்பதில் தவறில்லை.

**5.ஈழத்து இலக்கிய வரலாற்றில் வடமராட்சி**

இதுவரை கவனித்த பல்துறை சார்ந்த கவிஞர்கள், புனைகதையாசிரியர்களுள் ஒட்டு மொத்தமான ஈழத்து இலக்கியத்தில் இடம்பெறத் தக்கோர் யாவரென்றொரு கேள்வி எழுகின்றது.

அவ்வழி மரபுசார் இலக்கிய வளர்ச்சியில் உடுப்பிட்டி சிவசம்புப் புலவர் முக்கியமானவர். நவீன கவிதைத்துறையில் முற்போக்குக் கவிஞர் என்ற விதத்தில் பசுபதிக்கு முக்கிய இடமுள்ளது.

சிறுகதைத் துறையில் ஆனந்தன், கு.பெரியதம்பி, தெணியான், என்.கே.ரகுநாதன், நந்தினி சேவியர், செ.கதிர்காமநாதன், ரஞ்சகுமார், புலோலியூர் சதாசிவம், இரத்தின வேலோன், கே.எஸ்.துரை முதலானோர் முக்கியம் பெறக் கூடியோர்.

நாவலாசிரியர்களுள் தெணியான், கே.எஸ்.துரை, ஏ.ரி.நித்தியமூர்த்தி ஆகியோர் முக்கியமானவர்கள். பெண் எழுத்தாளர்களுள் குந்தவை, லதா, சந்திரகாந்தா முருகானந்தன், திக்க வயல் சிவயோக மலர் முதலானோர் கவனிப்பிற்குரியவர். பாரம்பரிய ஆளுமைகளுள் பல்வேறு துறைகளில் தம்மை வெளிப்படுத்தியோர்களுள், கந்த முருகேசனார், சச்சிதானந்தன், கவீ ஆகியோர் கவனத்தை ஈர்ப்பவர்கள்.

# நவீன கற்பித்தல் முறைகளுக்கு ஏற்ப நாமும் மாறுவோம்

மாறுவோம்.....!
மாற்றம் ஒன்றுதான்
காற்றுப் போன்று கனதியானது
நிரந்தரமானது.....!
மாறுவோம;...
மாற்றங்களே எம் மூச்சாகக் கொண்டு
அன்று...
ஏட்டிலும் எழுத்தாணியிலும் சிரித்த கல்வி
இன்று
காற்றில் பறக்கும் கடதாசியில் வரவில்லையா?
அவ்வாறே...!

மாறுவோம;.....!
மாற்றம் ஒன்றுதான்
காற்றுப் போன்று கனதியானது
நிரந்தரமானது.....!

எம்மை சற்று யோசித்துப் பார்ப்போம;...!
ஆக்கத்தின் வடிவமாம் பிரம்மாக்கள் நாம்
எம்மால் எதுவும் முடியும்.!
உழுது பயிரிடும் உழவனைப் போல்
அழுது பயிலும் மாணவத்துவத்துக்காய்
மாறுவோம்;...
மாற்றங்களே எம்மைப் புதுப்பிக்கட்டும்
வீட்டிலே குருகுலக்கல்வி
நடந்தது அன்று..!
மாணவனின் மனது அறியாது
மனனம் ஒன்றே கல்வியாய் மாற
வர்க்க வேறுபாட்டு பித்தலாட்டத்தில்
ஏகலைத்துவ கல்வி அழிய ..
வீட்டிலே குருகுலக்கல்வி நடந்தது......!

மாணவர் சிந்தனையை
மகிழ்ந்து கிழறி
சாதனை செய்ய
சடுதியில் மாற்றுவோம;...!
தேடல் அவனது சிறப்பாய் அமைய
பாடலோடே படிப்பித்தல் தொடர்வோம்
உலகமயமாதல் என்று
உன்தன் வேகத்திற்கு
உணர்வாய் அவனை
தயார் படுத்துவோம்.

வேலை உலகத்தில் ....அவன்
வேதனை போக்கி...!
சாதனைகள் செய்ய உவந்து
உருவாக்குவோம்
சிந்தனை அவனது
சிறகாய் அமையட்டும்..!
தேடல் அவனது
கடமையாய் அமையட்டும்
"நவீனம்" அவனது பாதையாய்
அமையட்டும்
அவனின் நடக்கும் வாழ்வு
புது உலகம் நோக்கட்டும்...!
அதற்காக நாம்
புதுமைகளை விழுங்குவோம்...!
எப்படி இந்தசெப்படி வித்தை
சாத்தியமாகுமா...?
கரும்பலகை கண்ணியர்கள்
இனியும் வேண்டாம்...!
வெண்கட்டி கோல்களை
தூக்கி எறியுங்கள்...!
கணனி காரிகையுடன்

புதுமணம் ஒன்றை
புரிந்து கொள்ளுங்கள்- உம்
உதிரும் வார்த்தைகளுக்கு
உரம் ஊட்ட
காட்சிகளை இன்றே தயார்படுத்துங்கள்

மானிட உண்மை
மனநிறைவோடு மகிழ்ந்து
கற்பிக்க............
மாணவர் மையக் கல்வியூடே
குழுச் செயற்பாட்டில் குதூகலம் பெறட்டும் -
அவன்
விட்டுக் கொடுப்பு
புரிந்துணர்வுடனே
கற்கும் கல்வியை கடுதியில் பெறுவான்

சுயமாய் இயங்கும்
மாணவர் குழாத்தை
தேர்ச்சிகள் பெறவும்
தேவதைகள் ஆக்கவும்
"5ஙு" முறையை பயின்று
பயன்படுத்துவோம்

பின்னடைவான
மாணவன் என்று
பின்தள்ளிய காலத்தை தூக்கியெறியுங்கள்
பரிகார கற்பித்தலை
பௌத்திரமாய் பின்பற்றி
பயின்றிடுவோம்
அவன் பாதை
சிறக்கட்டும்.........!

ஈ மெயில், இன்ரநெற்
என்ற நவீன தோட்டத்தில்
நாமும் நுழைந்து
பிலிப் சாட்டினூடே
பிழைகளை நீக்கி
அழகாய் கற்பிப்போம்
அவன்- (மாணவன்)
ஆளட்டும் உலகை

ஆம்
மாறுவோம். மாற்றுவோம் !
புது உலகம்
படைக்கும்
புதுச் சிப்பிகளாய்
மாணவர்களை உருவாக்க.......
நவீன கல்வியை
பாதையாய் கொள்வோம்...!
நல்ல மாற்றங்கள் உடன் - எம்
பாதங்கள் தொடரட்டும்.

**திருமதி. S.தனேஸ்வரி,**
**ஆசிரியை**

# பரமனடி சேர்ந்த பத்துமா

யா/விக்கினேஸ்வராக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கம் அமைப்பதற்காக அங்கு படித்த மாணவ, மாணவிகளைத் தேடித் தொலைபேசியில் தொடர்பு கொண்டபோது பத்துமா ரீச்சர் 'நான் படுக்கையிலிருக்கிறேன் என்னால் என்ன செய்யமுடியும்' என்று கவலைப்பட்டார். நான் அவவுக்கு ஆறுதல் கூறி ஒரு நாள் உம்மை வந்து சந்திக்கிறேன் என்று அன்றைய உரையாடலை முடித்தேன். நான் வேல்ஸிலிருந்து வந்த புதிது. எனவே மகளின் உதவியுடன் சென்று பார்த்தேன். என்னிடம் படித்த மாணவி இளம் மாணவி இந்நிலையிலிருந்தது கண்டு மனம் துடித்தேன். என்னால் முடிந்த உதவி செய்கிறேன் என்று கூறி விடை பெற்றேன். நான் படித்த Reflescologyயும் ஆயுள்வேத எண்ணையையுங் கொண்டு அவருக்கு உதவி செய்தேன். அந்நேரங்களில் அவருடைய மனஉணர்வுகள் என்னால் புரிந்து கொள்ள முடிந்தது. எம்மில் எத்தனையோ பெயர் சுகமாக வல்லவர்களாக செல்வர்களாக இருந்தும்..மற்றவர்களைப் பற்றிச் சிந்திப்பது வெகுகுறைவு. ஆனால் பத்துமா தனது இயலாமையிலும் மற்றவர்கட்கு எந்த வழியிலாவது உதவி செய்ய வேண்டும் என்று துடித்தார். சிறிது சிறிதாக உடல் நலம் தேறிவந்தபோது. ஒரு நாள் பத்துமா தனது நடுங்கும் கரங்களினால் சிறு சிறு வெட்டுத்துண்டுகளைப் பொருத்திக் கொண்டிருந்தார். ஏன் இவ்வளவு சிறிய துணிகளைப் பொருத்துகின்றீர் என்ற போது பத்துமா கூறினார். நாம் ஒரு சிறு குழுவினர் சேர்ந்து வெட்டுந்துண்டுகளைச் சேர்த்து தைத்து சட்டைகளாக்கி இலங்கையிலுள்ள எமது அனாதைக் குழந்தைகட்கு அனுப்பகிறோம் என்று கூறியதுடன் வைத்தியர் ஜெகதாம்பிகை ஞானப்பிரகாசம் என்பவர் கொண்டுவந்து தருவதாகவும் கூறியதுடன் அவவையும் எனக்கு அறிமுகப்படுத்தி நல்ல ஒருநட்பையும் உருவாக்கித் தந்தார். என்னிடம் தையல் இயந்திரம் இருப்பதால் நான் இதனைச்செய்கிறேன் என்று அவற்றைச் சட்டைகளாக்கிக் கொடுத்தேன். ஆனாலும் பத்துமா தன் வேலை முடிந்தது என்று பேசாமலிருக்காமல் கேக் அலங்கரிப்பது சமையல் குறிப்புகள் என்று பலவிடயங்களையும் தொலைக்காட்சிக்கு எடுத்துக்கூறுவர்.

இச்சங்கம் அமைப்பதற்கு முன் பாடசாலைக்கு கணணி அனுப்ப இருந்த போது தானும் ஒரு கணணிக்கு மனவுவந்து பணவுதவி செய்ததுடன்

பல புத்தகங்களையும் தந்து உதவினார். தன்னுடைய நோயையோ, தன் கஸ்டங்களையும் சிந்தியாது மற்றவர்க்கு உதவி செய்வதில் ஒரு எடுத்துக்காட்டாக இருந்தார். அதுமட்டுமன்று எனக்கு ஒருநட்பை அறிமுகப்படுத்தியது போன்று ஒரு குருவையும் அறிமுகப்படுத்திய ஒரு சக்தி என்றே கூறலாம் முன்பு மனிதரை மனிதர் வணங்குவது பற்றி நம்பிக்கை இல்லாமலிருந்தேன். மனிதன் உயர்வடைவதற்கு குரு அவசியம் என்பதை பத்துமா மூலம் எனக்கு இறைவன் கட்டளையிட்டான். ஒரு நாள் பத்துமா ரீச்சர் எனக்கு ஒரு உதவி செய்வீர்களா? என்று கேட்டார். இயலுமானால் செய்வேன் என்று கூறிய போது கஸ்டமானது. ரீச்சர் என்று தயங்கியபடியே ஒரு புத்தகத்தைத் தந்து இப்புத்தகத்தை விரதமிருந்து 7 நாட்களுக்குள் வாசித்து முடிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். நம்பிக்கையில்லாமலிருந்தாலும் அவவின் சந்தோஷத்திற்காக வாங்கிவந்து 7 நாட்கள் விரதமிருந்து புத்தகத்தை வாசித்துமுடித்தேன். அதன்பின் அவவில் மாற்றங்கள் ஏற்பட்டது. எனக்கும் புத்தகத்திலும் அதன் குரு சீரடி சாயிபாபாவிலும் நம்பிக்கை ஏற்பட்டது. நான் புத்தகத்தை திருப்பிக் கொடுத்த போது நீங்களே வைத்துக்கொள்ளுங்கோ பலருக்கும் பயன்படக்கூடியதாகப் பாவியுங்கள் என்று கூறி ஒரு சாயிபாபாவின் படத்தையும் எனக்குத் தந்தார். இன்னும் என் சாமியறையில் புத்தகமும் சாயிபடமும் வழிபடப்படுகின்றதுடன் பலரும் இதனால் பயனடைந்துள்ளார்கள்.

பத்துமா மரணத்தின் முதல் நாள் என்னுடன் தொலைபேசியில்தான் பலகட்டுரைகளை வைத்திருப்பதாகவும் அவற்றில் ஒன்றைக் கல்லூரிப் புத்தகத்தில் போடும்படியும் கேட்டுக் கொண்டார். நான் அவருடைய கட்டுரையில் சிரிப்பு நல்லது சமையல் குறிப்பிலும் பார்க்க நல்லது அனுப்பும் என்று கூறினேன். ஆனால் அது அனுப்பமுன்பு இறைவன் கூப்பிட்டுவிட்டார். ஆனால் அவருடைய சகோதரர்கள் அக்கட்டுரையை வாங்கிவைத்திருந்தேன். அந்தவருடம் எமது புத்தக வெளியீடு நடைபெறாததினால் இம்முறை வெளியிடுகிறோம். அவவின் வேண்டுகோளின்படி நாம் என்றும் சிரித்து வாழ்வோம் என்று திடசங்கற்பம் கொள்வதுடன் பாத்துமாவின் ஆத்மா சாந்தியடைய வேண்டுகிறோம்.

# சிரிப்பு

## ஆக்கம்: திருமதி: பத்மா சிதம்பரநாதன்

மனிதனுக்கு மட்டுமே கிடைத்த வரப்பிரசாதம் சிரிப்பு. இது மற்ற எந்த உயிரினங்களாலும் செய்து அனுபவிக்க முடியாத ஒன்றாகும். ஏழை, பணக்காரன், ஆண், பெண் என எல்லாருக்கும் பாகுபாடின்றி விரும்பியபடி அநுபவிக்க கடவுளால் கொடுக்கப்பட்டது. வாய்விட்டுச் சிரித்தால் நோய் விட்டுப் போகும் என்பது ஆன்றோர் வாக்கு. இதை அநுபவத்தால் பலர் உணர்ந்ததால் சேர்ந்து சிரித்துப் பலன்பெற இன்று உலகெங்கிலும் சிரிப்புச் சங்கங்கள் Laughing Clubs உருவாக்கப்பட்டுச் செயல்பட்டு வருகின்றன.

ஒருவர் வாழைப்பழத் தோலில் கால்வைத்துச் சறுக்கி விழுந்ததும் நாம் முதலில் சிரித்துவிட்டால் அவரைத் தூக்கிவிட எமக்கு மனத்திலும் உடலிலும் பலம் வந்து சேர்ந்துவிடும். அல்லது விழுந்தவருடன் சேர்ந்து நாமும் அழுவோமானால் அவரை உடன் தூக்கிவிட எம்மால் முடியாது. மேலும் நாம் சிரித்தபடி அவரைத் தூக்கி விடும்போது விழுந்தவருக்கும் வலி மறைந்து சிரிப்பு வரும். இதனாலேதான் "இடுக்கண் வருங்கால் நகுக, அதனை அடுத்தூர்வது அ∴தொப்பது இல்" என்று வள்ளுவர் கூறிச் சென்றுள்ளார். இதன் பொருளாவது: துன்பங்கள் வரும்போது மனம் தளராமல் நகைத்து ஒதுக்குக, துன்பங்களைக் கடப்பதற்கு அதனைவிடச் சிறந்த வழி வேறு எதுவும் இல்லை என்பதாகும். 'ஜென்' ஞானிகள் சிரிப்பதை ஒரு யோக முறையாகக் கொண்டுள்ளார்கள். இம்முறையைக் கையாண்டு ஞானம் பெற்ற மூன்று புத்தர்களில் (ஜென் ஞானிகள் தங்களைப் 'புத்தர்கள்' எனக் கூறுவர்) ஒருவர் இறந்து விட்டாராம். மற்ற இருவரும் இறந்தவரின் உடலைப் பார்த்து 'இடி இடி' யென சத்தம் போட்டுச் சிரித்துச் சிரித்தே ஞானம் பெற்றார்கள் எனவொரு கதையுண்டு.

'இடி இடி'யெனச் சிரித்தால் மன அழுத்தம் குறையும், கவலை விட்டுப் போகும். எப்போதும் மற்றவர்களைச் சிரிக்க வைப்பவர்களுக்கு நகைச்சுவை நாயகன் அல்லது நகைச்சுவை நாயகி என்று பெயர் சூட்டி மக்கள் மகிழ்வர். சினிமாவில் கூட நகைச்சுவைக் காட்சிகளைத்தான் நண்பர்களோ, உறவுகளோ சேர்ந்து பார்த்து ரசிக்க விரும்புவார்கள். பார்த்தவற்றை மீண்டும் மீண்டும் சொல்லிச் சிரிக்கவும் முடியும்.

சிரித்த முகத்துடன் இருப்பவர்களைச் சுற்றி எப்போதும் ஒரு கூட்டம் இருக்கும். அகத்தின் அழகு முகத்தில் தெரியும் : என்பார்கள். எப்போதும் சந்தோசமாக இருப்பவர்கள். உற்சாகத்தோடு இருப்பார்கள். இவர்களால்தான் எல்லா விசயங்களிலும் வெற்றி பெறவும் முடியும். இவர்கள் தாங்களும் மகிழ்ச்சியாக இருந்து மற்றவர்களையும் மகிழ்ச்சியாக இருக்கச் செய்வார்கள். சிரிப்பில் பல வகைகள் உண்டு. அவற்றில் அசட்டுச் சிரிப்பு, அகங்காரச் சிரிப்பு ஆணவச் சிரிப்பு சங்கீதச் சிரிப்பு என்பன சிலவாகும். முழுமனத்துடன் இயல்பாக சிரிப்பதே நம் உடலுக்கும் மனதுக்கும் நன்மை செய்யும்.

சிரிப்பது எம் உடலின் நோய் எதிர்ப்புச் சக்தியைக் கூட்டும். நாம் நன்கு மனம்விட்டுச் சிரிக்கும்போது 'என்டர்பின்ஸ;'(Endorphins) எனப்படும் வலி நிவாரண இரசாயனத்தை உடல் சுரக்க வைக்கும். இதனால் எம் மனம் லேசாகி எதையும் இலகுவாக எடுக்கச் செய்து எமது வாழ்க்கையை ஆனந்தமானதாக ஆக்கும். ஆகவே நண்பர்கள், உறவுகள், பிள்ளைகள் சிரித்து வாழப் பழகுங்கள். அது உங்களுக்கும் இவ்வுலகத்துக்கும் நன்மை பயக்கும்.

# வேர் அறியா விழுதுகளே...

நவராத்திரி என்பது ஒன்பது இரவுகள் மூன்று தெய்வங்களையும்(துர்க்கை இலக்குமி சரஸ்வதி) முறையே மூன்று தினங்கள் வழிபடும் இரவுகள் ஆகும். ஆனால் பொதுவாக சரஸ்வதி பூசைதான் உடன் மனதில் நினைவுக்கு வருகிறது. அந்த ஒன்பது நாட்களும் நான்படித்த கரவெட்டி விக்கினேஸ்வராக்கல்லூரியில் நடைபெற்ற நவராத்திரி விழாவும் அதில் ஏற்பட்ட அனுபவங்களும் என்றுமே மறக்கமுடியாதவை.அறுபதுகளின் நடுப்பகுதியில் வடமராட்சி ஆசிரியர் சங்கம் நடாத்திய புலமை பரிசில் பரீட்சையில் விசேட சித்தியடைந்தும் நிரந்தரவருமானம் உள்ளகுடும்பம் (தந்தையார் ஓர் ஆசிரியர்)என்பதால் புலமை பரிசில் உதவித்தொகை மறுக்கப்பட்டாலும் வீட்டுக்கு அருகில் அமைந்துள்ள சிறந்தபாடசாலை என்பதாலும் குடும்பத்தவரின் விருப்பத்திற்கிணங்க தொடர்ந்தும் க.பொ.த புகுமுக வகுப்பில் சேர்ந்து கல்வி பயிலத் தொடங்கிய காலம் அது. அதுவரை பாடசாலையில் நடந்த எந்த ஒரு நிகழ்விலும் பார்வையாளராக இருக்க முடிந்ததே ஒழிய பங்காளராக இருக்கமுடியவில்லை காரணம் க.பொ.த சாதாரண வகுப்பு மாணவர்களே (விஞ்ஞானம்.வர்த்தகம்.கலைப்பீடம்) எல்லா நிகழ்ச்சிகளையம் திறம்பட ஒழுங்கமைத்து அந்தந்த துறைசாந்த ஆசிரியர்களால் வழிநடாத்தப்பட்டு ஏட்டிக்கு போட்டியாக நடைபெற்றகாலம். சைவசமயபாட ஆசிரியர் பலர் இருந்தும் சைவப்பழம் கார்த்திகேசு ஆசிரியர் அவர்களை என்றுமே மறக்கமுடியாது மிகவும் கண்டிப்பான அதேநேரத்தில் எல்லோருடைய சுகதுக்கங்களில் கலந்து ஆறுதலும் உதவியும் புரிவதில் அவருக்குநிகர் அவரேதான். பாடசாலையில் நடைபெறும் சமயநிகழ்சிகள் எல்லாவற்றையும் முன்நின்று நடாத்துவதில் அவருக்குள்ள ஆளுமை நிறைந்த விதவிதமான அணுகுமுறைகள் இன்றும் நினைத்தாலும் வியப்பாகவே இருக்கிறது தினசரி காலையும் மாலையும் பாடசாலை தொடங்கும் போதும் முடிவடையும் போதும் எல்லா வகுப்புக்களுக்கும் கேட்கும்வண்ணம் பாடசாலை நடுவில் ஒரு இடத்தை தெரிவுசெய்து எல்லோருக்கும் கேட்கும்விதமாக (தேவாரம், திருவாசகம், திருப்புராணம்) முதலியவற்றை உயர்வகுப்பு மாணவர்களை அவர்களுடைய பாடப்புத்தகத்திலிருந்தே பாடமாக்கி ஓத வைப்பதினால் எதிர்காலத்தில் பரீட்சையில் மட்டுமல்லாது வாழ்க்கையிலும் வெற்றியடையவைத்தவர். வெள்ளிக்கிழமைகளில் சிவபுராணம், கந்தசஸ்டி காலத்தில் கந்தபுராணம். திருவெம்பாவை காலத்தில திருப்பள்ளியெழுச்சி. திருவெம்பாவை. நவராத்திரி ஒன்பதுநாளும் சகலகலாவல்லிமாலை என நேரம் காலம் அறிந்து மாணவர்களை

தயார்செய்து வைத்திருப்பார் நவராத்திரி ஒன்பதுநாளும் மூன்றுபிரிவாக பிரித்து க.பொ.த (சாதாரண) முதலாம்.இரண்டாம்.மூன்றாம் ஆண்டு மாணவர்களிடம் ஒப்படைக்கப்படும் (அப்போதெல்லாம் க.பொ.த(சாதாரணம் மூன்று வருடங்கள் உயர்தரம் நான்குவருடங்கள்) முதல் மூன்று நாளும் விஞ்ஞான,வர்த்தக,கலை முதலாம் ஆண்டு மாணவர்களிடமும், அடுத்தமூன்று நாளும் இரண்டாம் ஆண்டு மாணவர்களிடமும் கடைசிமூன்று நாளும் மூன்றாம் ஆண்டு மாணவர்களிடமும் பகிர்ந்தளிக்கப்படும். ஒவ்வொரு பிரிவிலும் நான்கு வகுப்புக்கள் சராசரியாக நூறு மாணவர்கள் ஆளுக்குப் பத்து சதம் வீதம் காசுசேர்த்து கிட்டத்தட்டப் பத்து ரூபா சேரும் அந்தக்காலத்தில் பத்துரூபா என்பது நூறு மாணவர்களுக்குரிய அவல், கடலை,சக்கரைச்சாதம் என்பன போதுமான அளவுக்கு கொள்முதல் செய்து விநியோகிக்கமுடியும். சோடனை, அவல், கடலை,சக்கரைச்சாதம் தயாரிப்பு என்பன ஒவ்வொரு வகுப்பு மாணவர்களிடமும் பகிர்ந்தளிக்கப்பட்டது எமக்கு கிடைத்தது அலங்காரம் செய்வதற்குரிய பொறுப்பு வாழை தோரணம் சவுக்கு மாவிலை என்பன மட்டுமே கொண்டு எமது கற்பனைக்கு ஏற்ப அழகாக அலங்கரிக்கவேண்டும் தொடங்கியது பிரச்சினை எமதூரில் வீட்டுக்கு குறைந்தது ஒரு அடிவாழையாவது இருக்கும் ஆனால் ஒருஇலை வெட்டினால் குலையில் ஒருசீப்பு குறையும் என்று கருதுபவர்கள் வாழையா இனாமாககொடுப்பார்கள், நான்கே நான்கு வாழைக்குட்டி சேகரிப்பதற்கு சகமாணவர்கள் இருபத்தைந்துபேரும்.

இருபத்தைந்துதிசைகளிலும்(பதினாறுதிக்குஎன்பதுவேறுவிடயம்) அவரவர் வீட்டில் கெஞ்சிமன்றாடியும் வீட்டுக்குதெரியாமலும் எடுத்துவந்த துவிச்சக்கரவண்டியில் கொட்டும் மழையிலும் வெள்ளவாய்க்கால்வழியேயும் அலைந்துதிரிந்து கலட்டி பொன்னுகடையில் ஒன்றுகூடி பலத்தவாக்குவாதத்தின் பின் மீண்டும் மனம்தளராத விக்கிரமாதித்தன் போல் எல்லோரும் ஒன்றாகக்கிளம்பி பலத்தசத்தத்துடன் இங்கே போவோம் அங்கே போவோம இவரிடம், அவரிடம் என்று வாக்குவாதத்துடன் முழுறோட்டும் எமக்கேயுரிமை என்பதுமாதிரி துவிச்சக்கரவண்டியில் சென்றுகொண்டிருக்கும்போது எதிரே எமது கிராமவிதானையார் தாமோதரம்பிள்ளை தனது துவிச்சக்கரவண்டியில் வெள்ளைவேட்டி சால்வை சகிதம் உழைத்து உரமேறிய உடம்புடன் வருவதை கண்டவுடன் எம்மிடையே மயானஅமைதி ஆனால் அவருக்கு வழிவிடமறந்துவிட்டோம் அவருக்கேயுரிய அதிகாரத்தடன் கோபத்துடன் எல்லாரையும் மிரட்டும் பாணியில் பக்கத்தவீட்டு படலையை காட்டி எல்லாரும் அந்தவீட்டுமுற்றத்தில் உங்கள் துவிச்சக்கரவண்டிகளை நிற்பாட்டி பூட்டித்திறப்பை

கொண்டுவாருங்கள் என்று கட்டளைவேறு (அவருக்கு தெரியாது அரைவாசி துவிச்சக்கரவண்டிகளுக்கு பூட்டேஇல்லை என்பது) எண்ணி ஒரு பத்து திறப்பு என்னுடையதையும் சேர்த்து எனது கையில் இவ்வளவுநேரமும் கும்பலில் மறைந்துநின்ற நான் விதானையார் முன் சென்றேன் என்னைக்கண்டவுடன் முகத்தில் லேசானபுன்சிரிப்புடன் வேலியில் பூவரசம் கம்பு ஒன்றை புடுங்கி இலையை உருவமுதலே முகத்தில் லேசானகவலையுடன் கண்களில் கண்ணீர்வழிய (அப்பா வடலிமட்டையால் அடித்தேஅழாதநான் அன்றுஎப்படியழுதேன் என்பதுஆண்டவனுக்குதான் வெளிச்சம்) விதானையப்பா உங்களை பார்க்கத்தான் எல்லாரும் வந்துகொண்டிருக்கிறோம் என்று பச்சைப்பொய் ஒன்றை கூறினேன்(எந்தப்பெரிய மனிதனும் தன்னிடம் உதவி கோரிவரும் எதிரிக்கு கூட உதவுவார் என்பது அம்மா சொல்லித்தந்தது) என்னடா பொடியள் இந்தமழையுக்குள்ள என்னைத்தேடிவரவேண்டிய அலுவல் என்ன ஏதும்விழாவுக்கு தலைமை தாங்கவேணுமோ என்று பீடி அடித்த காவிப்பல்லு தெரியசிரித்தாரே ஒருசிரிப்பு அப்பாடா அப்பதான் நெஞ்சுக்குள்ளை தண்ணி வந்தது இதுதான் தருணம் என அன்று பகல் முழுவதும் சரஸ்வதி பூசைக்கு வாழை தேடி அலுத்தகதையையும் இறுதியில் உங்களிடம் உதவி கேட்பது என்ற முடிவோடு வந்துகொண்டிருக்கிறோம் என்றவுடன் அதுக்கு உப்பிடியே வாறது முடக்கு வழிய ஏதும் வாகனம் வந்தால் உங்கடகதிஎன்ன என்ற அறிவுரையுடன் காதில் சொருகி வைத்திருந்த ஐம்பது சதக்குத்தியை எடுத்து என்னிடம் தந்து ஓடிப்போய் இரண்டு கட்டு பீடி எனக்கு என்றுசொல்லி பொன்னுகடையில் வாங்கிவாடா மற்றாக்கள் என்னோடு வாங்கோ என்றது தான் தாமதம் பூட்டில்லாதவங்கள் எல்லாம் வலுகெதியாக விதா னையாரைப்பின்தொடர பூட்டினவர்கள்பட்டபாடு பூட்டைத்திறப்பதிற்கு எந்தத்திறப்பு யாருடையது என்றுயாருக்கு தெரியும் (இன்றுவரைஇந்தப்பிரச்சினை என்னை விட்டபாடில்லை எங்காவது வெளியில் சென்றுவிட்டு வீடுவந்து முன்கதவை திறப்பதற்கிடையில் மற்றும்வேளைகளில் இஞ்சாருங்கோஅப்பா என்று அன்பொழுக அழைக்கும் எனது சகதர்மினி இந்த அறிவு கெட்டமனிசனைக்கட்டி பட்டபாடு காணாதெண்டு இப்பகுளிருக்கைவேற நிக்கவேண்டிக்கிடக்கு என்றோ ஒருகதவுதிறக்க வக்கில்லை விட்டுப்பார் வெட்டிவிழுத்துவார் அல்லது என்ர தில்லையம்பலச்செல்லா இவ்வளவு காலமும் மூளைகெட்டமனுசனோடை பட்டபாடு காணாதே இனியாவது நல்லபுத்தியை கொடுஎன்ரை அப்பனே என்று வேண்டுவதுமாதிரியான அர்ச்சனைகள் பல விழும்) ஒருமாதிரி கஸ்ரப்பட்டு திறந்துகொண்டு எல்லாரும் விதானையாரைப்பின்தொடர நான்மட்டும்

விரைந்துசென்று இரண்டுகட்டுபீடி தாங்கோஎன்று பலமாகவும் விதானையாருக்கு என்பதை மெதுவாகவும் கூறியதை சரியாகசெவிமடுக்காத சொத்திக்கை பாரியக்கை வீட்டைபோய் அம்மாவிடம் உன்ரை மூத்தகுத்தியன் ஒரு இருபது இருபத்தைந்து தறுதலைகளோடு உந்தமழையெல்லாம் நனைஞ்சுபோட்டு இப்பகுளிருக்கு இரண்டு கட்டுபீடியெல்லே வாங்கிக்கொண்டு போறான் என்று அள்ளிவைத்ததால் பின்பு விதானையாரே எனக்காக சாட்சி சொல்ல வந்தகதை தனிக்கதை. பீடியோடைவிதானையார் வீட்டேபோனால் என்கண்களையே என்னால் நம்பமுடியவில்லை அங்கே மாவிலை கமுகமிலை தோரணம்செய்ய தென்னம் குருத்து,ஒருஆறு வாழைக்குட்டிகள் என எல்லாம் தயாராக இருந்தது விதானையாரை மனதாரவாழ்திக்கொண்டு நால்வர் வல்லிபுரக்கோவில் சென்று சவுக்கு வெட்டி வருவது என்றும் மிகுதிப்பேர் பாடசாலை சென்று சோடனை வேலைகளை ஆரம்பிப்பது என்றும் ஏற்பாடு சோடனைகள் எல்லாம் முடிய இரவு வெகுநேரமாகியதால் களைத்து வீடுவந்தால் பீடிப்பிரச்சினை அம்மாவிடம் அகப்பைக்காம்பால் அடி வாங்கி அழுதுகளைத்து பசியுடன் நித்திரைக்குப்போய் மறுநாள்காலை நேரத்துடன் பாடசாலைக்கு போனால் அங்கு தோரணப்பிரச்சினை இருவகையான முறையில்தோரணம் செய்வது என்பதோ அவை மங்கல நிகழ்சிகளுக்கு ஒருவிதமாகவும் அமங்கல நிகழ்சிகளுக்கு இன்னொரு விதமாகவும் செய்யவேண்டும் என்பதோ எமக்கு தெரியாது இரவிரவாக கஸ்டப்பட்டு பாடசாலை நடைபாதைகள் முன்பக்கநுழைவாயில் என்று ஒரே மாவிலை தோரணமயம். நுழைவாயில் இருபக்கமும் இருவாழைகள் கட்டி முதல்நாளே நவராத்திரி விழாவை கோலாகலமாக ஆரம்பித்து வைத்திருக்கிறோம் என்ற பெருமிதத்துடன் பாடசாலைக்குப்போனால் ஆசிரியர்களும்சரி மாணவர்களும்சரி கூட்டம் கூட்டமாகநின்று முகத்தில் ஒருவிதசோகத்துடன் கூடிக்கதைப்பதைக்கூட அவதானிக்கநேரமில்லாததால் முதல்நாள் பூசைக்குரிய ஏற்பாடுகளில் படுமும்முரமாக சுழன்றுகொண்டிருக்கும்போது எமது கார்த்திகேசு ஆசிரியர் கோபமாக வந்து எந்தமடையன் தோரணத்துக்கு தொன்னோலை கீறித்தந்தது என்று கேட்கவும் எல்லோரும் ஒன்றாக தோரணம் செய்த விண்ணணை கை காட்டவும் உனக்கு யாரடா சொல்லித்தந்தது என்றதும் அம்மம்மாவின் செத்தவீட்டில் தோரணம் செய்யும்போது பார்த்தனான் சேர் என்று படுகூலாக கூறவும் மடையா அதுதான் நீ விட்டபிழை என்று கூறி தென்னம் குருத்தின் ஒவ்வொரு இதழையும் கீழிருந்துமேலாக ஈர்க்குவரை ஐந்து இடத்தில் வெட்டி மடிப்பது அமங்கல நிகழ்ச்சிகளுக்கும் மேலிருந்துகீழாக மூன்று இடத்தில் வெட்டி மடிப்பதுதான் மங்கலநிகழ்ச்சிகளுக்கும் தோரணம் செய்யும்முறை என்று விளக்கிக்கூறி எல்லாவற்றையும் அவிட்டு எறியுங்கோடா என்றதும் எல்லோர்முகத்திலும் அசடு வழிந்தது இதில் ஆச்சரியம் என்னவெனில் எமதுபிழையை ஏற்கனவே கண்டுபிடித்த மூன்றாமாண்டு

கலை மாணவன்( கொக்கத்தடி) மணியம் எங்கிருந்தோ பழையகுடையின் கிழிந்த சீலைத்துண்டுகள் இரண்டை பாடசாலை முகப்பிலுள்ள வளைவில் எமது தோரணங்களுக்கிடையே கறுப்புக்கொடி போல் கட்டியதால் காலம்சென்ற முக்கியபிரமுகருக்குக் அஞ்சலியும் துக்கமும் அனுஸ்டிப்பதாக எல்லோரையும் எண்ணவைத்திருக்கிறது (அன்றையதினம் பாடசாலைக்கு வராதமாணவர்கள் மறுநாள்இதையே ஒரு காரணமாகக்கூறி அதிபரிடம் பிரம்படி வாங்காமல் தப்பினார்கள் என்பதை நினைக்க இன்றும் சிரிப்பு வருகிறது) மிகுந்தஅவமானத்துடன் விரைவாக எல்லாம் அவிட்டு எறிந்தபின் வெறும்மாவிலை மட்டும் கொடியில் எம்மைபார்த்து சிரிப்பதுபோல் தெரிந்தது கொஞ்சம் தென்னோலை மிச்சம் வைத்திருந்தால் திரும்பவும் கொஞ்சமாவது செய்திருக்கலாம் (எமது தமிழ் ஆசிரியர் மன்னவன் கந்தப்பு அடிக்கடி கூறுவார் எறும்புகூட மழைகாலத்துக்கு என்று உணவு சேமித்து வைக்கும் ஆனால் நீங்கள் எப்போது சேமிக்கும் பழக்கத்தை ஆரம்பிக்கிறீர்களோ அன்றுமுதல் உங்கள்வாழ்வில் ஏற்படும் கஸ்ட நஸ்டங்களில் கைகொடுக்கும் என்று எவ்வளவு அறம்நிறைந்தவார்த்தைகள் என்பதை அனுபவபூர்வமாக உணர்ந்தபின் தான் அறியமுடிகிறது) நாம் தான் எதுவும் மிச்சம் வைத்து பழக்கம் இல்லாதவர்களாச்சே .இறுதியில் தோரணம் இல்லாமலே முதல்நாள் நிகழ்ச்சிகள் ஆரம்பிக்கவேண்டிய நிலையாகிப்போய்விட்டது இந்தவிடயம் பாடசாலை முழவதும் கிசுகிசுவெனப்பரவி பாடசாலை மாணவர்கள் மட்டுமில்லாது எமது சகவகுப்பு மாணவர்களும் எம்மை கிண்டல் செய்யப்போய் ( தமது கடமையில் கவனக்குறைவாக இருந்ததால் ) அடிப்பிடித்த பொங்கலும் அவியாதகடலையும் கல்நீக்காத அவலுமாக ஒருவாறு எமது. முதல்நாள் நிகழ்ச்சி அரைகுறையாகநிறைவேறியது. இப்படி எல்லாம் அனுபவங்களே வாழ்க்கையாக வாழ்ந்த நாம் இன்று ஊரை இழந்து உற்றார் உறவுகளை பிரிந்து அகதியாக வந்து அல்லல் பட்டுக்கொண்டு எனது சொந்தமண்ணிலேயே என் இனத்தவர்கள் எந்த உரிமையும் இல்லாமல் வாழும்போது இங்குள்ள எம்மவர்களை நினைத்தால் நெஞ்சுபொறுக்குதில்லையே. பெற்றதாயும் பிறந்த பொன் நாடும் நற்றேவாழிதும் நனிசிறந்தனவே என்றுகூறி மீண்டும் சந்திப்போம்

**அன்புடன்**

**(கல்லடியான்) சபாநாதன்**

# பார்போற்றும் கல்லூரியாக மாற்றுவோம்

அவனியெல்லாம் போற்றிடவே
ஆண்டாண்டு காலம் புகழ்ந்திடவே
வளமான மாணவர் சமுதாயத்தை
மாண்புடனே ஏற்றம் பெற வைத்திடுவோம்
பார் போற்றும் கல்லூரியாக மாற்றிடுவோம்.

நவீன கற்றல் கற்பித்தலுடன்
ஆசிரியர் - மாணவர்கள் - பெற்றோர்கள்
அணி திரண்டு வழி சமைத்தே
புத்தாக்க முயற்சிகளை புகுத்தி நல்ல
பார் போற்றும் கல்லூரியாக மாற்றிடுவோம்

மாண்புமிகு சனாதிபதி மகிந்தவின் சிந்தனையை
மகிழ்வோடு ஏற்றிடுவோம்
விரியத் துடிக்கும் மொட்டுக்களை
மலர்களாக மாற்றிடுவோம் - நல்ல
பார் போற்றும் கல்லூரியாக மாற்றிடுவோம்

எம் கல்லூரியின் வளர்ச்சியிலே
ஏற்றமுடன் செயற்பட்டு
ஏணிப்படியாக உயர்ந்து செல்லும் எம்
முதல்வரின் பணி தொடர்ந்து
பார் போற்றும் கல்லூரியாக மாற்றுவோம்
"இசுறு" திட்டத்தில் உள்வாங்கப்பட்டு
உலகத்தில் புகழ்பரப்ப வேண்டும் என்று
மனசார நாங்கள் எல்லோரும்
மகிழ்வோடு சிந்தித்து செயற்பட்டு
பார் போற்றும் கல்லூரியாக மாற்றிடுவோம்

கரவெட்டி மண்ணின் மகிமைதனை
மண் வாசனையை செப்பிடவே
விக்னேஸ்வராவாய் உதித்து எமக்கு
விக்கினங்கள் தீர்த்து வைக்கும் தாயே உம்மை
பார் போற்றும் கல்லூரியாக மாற்றிடுவோம்

ஏழை- எளியவர் பாகுபாடு இன்றி
கசடறக் கல்வியைக் கற்பவர் வாழ்வினில்
ஒளியினை ஏற்றும் ஒப்பற்ற அன்னையே
கலங்கரை விளக்கமாய் திகழும் - வல்ல
பார் போற்றும் கல்லூரியாக மாற்றிடுவோம்

செந்தமிழின் ஆற்றொழுக்கை
சீர்தூக்கி பார்த்தவரும்
விஞ்ஞானத்தை மெய்ஞானத்தால் உணர்ந்தவரும்
முத்தமிழின் வித்துவத்தை அறிந்தவரும் அணிதிரண்டு
பார் போற்றும் கல்லூரியாக மாற்றிடுவோம்

ஆயுள்வரை கற்பதனால் வாண்மையினை விருத்தி செய்து
நல்லாசானாய் உருவாகி
வகை – வகையாய் தொகை தொகையாய்
புதுமையான விடயங்கள் மாணவர்க்கு புகுத்தி
பார் போற்றும் கல்லூரியாக மாற்றிடுவோம்

கணணியுடன் "இன்ரநெற்றும்", "ஈ மெயிலும்"
கரும்பலகையின்றி – சோக்கின்றி
மல்ரிமீடியாவிலே கற்போம்
நவீனத்துக்கும் - சவாலுக்கும் முகம் கொடுத்து
பார் போற்றும் கல்லூரியாக மாற்றிடுவோம்

முடிந்தவரை முயற்சிப்போம்
"முடியாது" என்பதை கைவிடுவோம்
"5நு" யை பயன்படுத்தி
கற்பித்தலை செய்வோம் - நல்ல
பார் போற்றும் கல்லூரியாக மாற்றிடுவோம்

கற்றலுடன் மட்டும் நிற்பதுவா எம் கடமை?
இணைப்பாட விதான செயற்பாட்டை
இதயசுத்தியுடன் நாம் ஏற்று
இயந்திரமாய் பணி செய்வோம்
பார் போற்றும் கல்லூரியாக மாற்றிடுவோம்

நாளைய உலகின் இன்றைய சிற்பிகளை
நலமோடும் வளமோடும் உருவாக்கவே
இன்று "சத்துணவுத்திட்டம்" நடைமுறைப்படுத்தியே
உற்சாகமான உயிரோட்டமானதொரு – மாணவரை
உருவாக்கி
பார் போற்றும் கல்லூரியாக மாற்றிடுவோம்

ஆசிரியர் தினமான அக்டோபர் ஆறில்
நாமனைவரும் ஒன்றாக
உறுதி கொள்வோம்
எம் நெஞ்சகத்தை தொட்டு சபதம் எடுப்போம்
பார் போற்றும் கல்லூரியாக மாற்றிடுவோம்

வாழ்க விக்னேஸ்வரவின் புகழ்
வளர்க அதன் நாமம்.

**செல்வி J.சுபத்திரா**

ஆசிரியை

**Flat 3 Hastings Court,**
**5 Parkhurst Road,**
**Sutton,**
**Surrey,**
**SM1 3RZ**

**யா.்.விக்கினேஸ்வராக் கல்லூரி பழைய மாணவர் சங்கம், ஐக்கிய இராட்சியம்**

அன்புடையீர்,

"எட்டிப் பழுத்த இருங்கனி வீழ்ந்தன
ஒட்டிய நல்லறஞ் செய்யாதவர் செல்வம்
வட்டி கொண்டீட்டியே மண்ணின் - முகத்திடம்
பட்டிப் பதகர் பயன் அறியாரே"

திருமூலர்

நடுவூரில் நச்சுமரம் வளர்ந்து பழங்கள் பழுத்து வீழ்ந்தன. ஆனால் ஒருவரும் தொடமுடியவில்லை. அதே போன்று வட்டிக்குப் கொடுத்து பணம் ஈட்டும் செல்வர்களின் பணம் ஒருவருக்கும் பயன்படுவதில்லை. இதே போன்று நம்மில் பலர் பணத்தைச் சேர்த்துப் பாதுகாத்துத் தாமும்அனுபவிக்காமலும் மற்றவர்கட்கு உதவாமலும் வீணே காலத்தைப் போக்குகின்றனர். நான் கொஞ்சம் பணத்தைச் சேர்த்து அதன் பின் உதவி செய்யலாம் என்கின்றனர். ஆனால் நாம் நினைப்பது வேறு நடப்பது வேறு. எமது கையில் ஒன்றுமேயில்லை. இன்று மட்டுந்தான் எமது கையில் நாளை யாரிடமோ? எனவே இன்றே எம்மால் இயன்ற அறங்களைச் செய்ய வேண்டும்.

"உடுக்கை இழந்தவன் கைப்போல ஆங்கே
இடுக்கண் களைவதாம் - நட்பு"

திருக்குறள்

காலத்தில் செய்த உதவிதான் பெரிது. இன்று எமது சமூகத்திற்கு நாம் செய்யும் சிறுதுளி பெரும் பயனைக் கொடுக்கும். உங்கள் எல்லோரினதும் உதவியினால்தான் நாம் இன்று 4வது கலைவிழாவை நடாத்தி 3வது மலரையும் வெளியிடுகின்றோம். ஆனால் நமது கரவையூர் மக்கள் அதிகம் படித்தவர், பணமுள்ளவர்கள், பலமுள்ளவர்கள் ஆனால் வெளியில் வருவதற்கு விருப்பமில்லாதவர்களாக இருக்கின்றனர். ஆன்று ஒரு பெருமகன் சித்தமணியம் என்பவர் சமுதாயத்தைப் பற்றி சிந்தித்தபடியால் நம் கிராமத்தில் எழுதப்படிக்க எல்லோருக்கும் முடியும் என்பதை பெருமையுடன் கூறலாம். பணவுதவி செய்யாவிட்டாலும் உங்களால் இயன்ற கலை ஆக்கங்களோ அல்லது உடல் உழைப்பையோ உதவிட முன்வாருங்கள். இதனால் உங்கள் பாரம்பரியம் உங்கள் சந்ததியைச் சென்று சேருவதுடன் எமது குழந்தைகள் பாதைமாறிப் போகாமல் பாதுகாக்கப்படுவர். எமது சங்கத்தின் வளர்ச்சி உங்களுடைய வளர்ச்சியுங்கூட.

எம்மில் சிலராவது பரந்த நோக்குடன் இருப்பதானால் இன்றும் எமது இனம் நிமிர்ந்து நிற்கின்றது. சங்கம் தொடங்கிய காலத்திலிருந்து தனது மனம் கோணாமல் கேட்ட பணவுதவிகளை அளித்த திரு.மதிவதனன் சிவானந்தம் அவர்களும், அவருடைய குடும்பமும் நலமுற வாழ்த்தி நன்றி கூறுகின்றோம்.

திரு.பொன்சிவா அவர்கள் விளம்பரங்கள் தந்துதவினார். தவறுதலாக விளம்பரம் புத்தகத்தில் இடம் பெறவில்லை. ஆனாலும் அவருடைய பெருந்தன்மையினால் கேட்ட பணத்தை தந்துதவினார். அவருக்கும் அவருடைய குடும்பமும் நன்றாக வாழ இறைவன் அருள் புரிய வேண்டியும் நன்றி கூறவும் கடமைப்பட்டுள்ளோம்.

திருமதி.விஜயா ரமேஸ் அவர்கள் தானாகவே முன் வந்து கலை நிகழ்ச்சிகள், சிற்றுண்டிகள், பணவுதவிகள் என்று பலவழிகளிலும் உதவி செய்தார். அவருக்கும் அவருடைய குடும்பத்தினரும் நீண்ட காலம் வாழ்ந்து நலமுடன் வாழ வாழ்த்துவதோடு நன்றியும் கூறுகின்றோம்.

அதிகமானோர் விக்கினேஸ்வராக் கல்லூரியில் படிக்காவிட்டாலும் தமது ஊர் என்ற முறையில் உதவிகள் செய்கின்றனர். இதில் முக்கிய இடம் பெறுபவர் திருமதி.அஞ்சலி ரவிக்குமார். அவர் தன் கணவருக்காக தன் சேவைகளைத் தந்ததுடன் அதிக நுழைவுச் சீட்டுகளை விற்று தந்து உதவினார். அவருக்கும் எமது நன்றிகள்.

திரு.அம்பிகாவரன் ஆசிரியர் எமது அழைப்பையேற்று தனது நேரத்தையும் பணத்தையும் செலவழித்து வந்து எம்மைக் கௌரவித்தமை மறக்கமுடியாது அவருக்கும் நன்றிகள்.

அறுசுவை உணவு திரு.சபாநாதன் குடும்பத்தினரும், குளிர்பானங்கள் திரு.யுவன் மாயவன் அவர்களும் சிற்றுண்டிகள் வழங்கிய பழைய மாணவர்களுக்கும் நன்றிகள். நான் கூப்பிட்டதும் ஓடி வந்து உதவி செய்யும் பழைய மாணவர்கள் திரு.பத்மசிறீ இராசலிங்கம், திரு.கர்ணன் சின்னத்தம்பி இருவருக்கும் எனது நன்றிகள்.

ஒரு கை தனித்து ஒன்றும் செய்ய முடியாது பலகை சேர்ந்தால்தான் பலத்த சத்தம் வரும். எமது கல்லூரிக்கு அருகாமையிலுள்ள காணியைக் கொள்வனவு செய்து ஒரு கட்டிடம் கட்டத் தீர்மானித்துள்ளோம். இவ்வளவு காலமும் காணிக் கொள்வனவு செய்வதில் இழுபறி ஏற்பட்டது. தற்போது அது நிறைவேறும் சந்தர்ப்பம் ஏற்பட்டுள்ளது. எனவே எல்லோரும் ஒன்று கூடி நாம் வாழ்ந்த காலத்தை பொறித்துச் செல்வோம்.

எமது பாடசாலை தரப்படுத்தலின் போது வடபகுதியில் 12வது இடத்தைப் பெற்றுள்ளதுடன் அதிக மாணவர்களை பல்கலைக்கழகத்திற்கு அனுப்பியும் வருகின்றது. 28ம் இடத்திலிருந்த பாடசாலை இன்று 12வது இடத்தை பெற்றிருப்பது அதிபர், ஆசிரியர்களின் உழைப்பேயாகும். அது மட்டுமன்று வறுமைக்கோட்டின் கீழுள்ள குடும்பத்திற்கும் உதவுமுகமாக அதிபர் கேட்டதற்கிணங்க சில தனிப்பட்டவர்களிடம் பணத்தைச் சேர்த்து மாதம் £40 அனுப்புவதாகத் தீர்மானித்து பணத்தை அனுப்பியுள்ளோம். அது போன்று வறுமைக் கோட்டின் கீழுள்ள மாணவருக்கு மேல் படிப்புக்கும் உதவி செய்வதற்கு உத்தேசித்துள்ளோம். இன்று எம் மக்கள் பல இன்னல்கட்கு உட்பட்டு அல்லல் படுகின்றனர். அவர்கட்கு எம்மாலியன்ற உதவியைச் செய்வோம். சிறுதுளி பெருவெள்ளம் தயவுசெய்து உங்களால் இயன்றவற்றைச் செய்யுமாறு தாழ்மையுடன் வேண்டுகின்றேன். இத்துடன் 2007 வருமானச் செலவு கணக்கு உள்ளது.

## யா/விக்கினேஸ்வராக் கல்லூரி பழைய மாணவர் சங்க வருமானச் செலவுக் கணக்கு

| | | | | | |
|---|---|---|---|---|---|
| கடந்த வருட வருமானச் செலவுக் கணக்கு இருப்பு | | | | | **£4,813.00** |
| **2007ம் ஆண்டுக்கான வருமானச் செலவுக் கணக்கு** | | | | | |
| நுழைவுச் சீட்டு விற்பனை | | £2,390.00 | | | |
| விளம்பரம் | | £850.00 | | | |
| விளம்பரநிலவை எதிர்பார்ப்பு | £400.00 | | | | |
| உணவு விற்பனை | | £517.00 | | | |
| புத்தக விற்பனை | | £160.00 | | | |
| நன்கொடை | | | | | |
| திரு.பொன்சிவா | £300.00 | | | | |
| திரு.மதிவதனன் | £300.00 | | | | |
| திருமதி.விஜயா ரமேஸ் | £300.00 | £900.00 | | £4,817.00 | |
| மண்டப வாடகை | | | £270.00 | | |
| அலங்காரம் | | | £100.00 | | |
| விளம்பரம் | | | £150.00 | | |
| ஒலி, ஒளி | | | £250.00 | | |
| புத்தக அச்சடித்தல் | | | £700.00 | | |
| உணவு | | | £200.00 | | |

| | | | | |
|---|---|---|---|---|
| உணவுப் பாத்திரம் | | £95.81 | | |
| அஞ்சலி துண்டுப்பிரசுரம் | | £140.00 | | |
| பாடசாலை மாணவர்களுக்கு அனுப்பியது | | £150.00 | | |
| சில்லறைச் செலவுகள் | | £135.00 | £2,190.81 | |
| வருமானம் | | | | £2,626.19 |
| | | | | |
| சில்லறைச் செலவுக்கு | | | | |
| | | | | |
| முன் மீதி £65+£135 | | | | |
| | | | | |
| மாலை, வாழைப்பழம், நிறைகுடம் | £46.00 | | | |
| பொன்னாடை | £15.00 | | | |
| போக்குவரத்து | £20.00 | | | |
| னுஏனு | £17.50 | | | |
| தபால்செலவு | £45.13 | | | |
| தொலைபேசி | £200.00 | | £163.63 | |
| சில்லறைச் செலவு மீதி | | | | £36.37 |
| | | | | **£7,476.14** |

# எங்கள் கல்லூரி

இது ஓர் பெருவிழா...
ஆம் கல்விப் பெருவிழா
இந்தக் கோவிலில் நாள்தோறும் திருவிழா
விற்பன்னர் பலர் கூடிய
மாணவர் வினை தீர்க்கும் பெருவிழா
விக்னேஸ்வராக் கோயிலில் நாள்தோறும் திருவிழா.

ஆலமரத்து விழுதுகள் என
அறிவைத்தரும் ஆசிரியர் குழாம் - இங்கு
துரோணாச்சாரியாரின் துரோகங்கள்
எதுவுமின்றி தூயகல்வி அவர்கள் தருவர்
விண்ணை முட்டும் விந்தை செய்திகளை
கண்ணைச் சிமிட்டும் கணனிகள் மூலம் - காட்டுவார்
எண்ணத்தை ....கல்வி எண்ணத்தை
நம் சிந்தனையில் எளிதாக புகுத்தி
வல்லவராய் கல்வி மானாய்
வாழ்க்கையில் நாம் உயர
உன்னதமான உயரங்கள் - எம் ஆசான்

கல்வித் தகைமையை கடுதியல் பெற்றவர்கள்
காலத்தின் ஓட்டத்தை கணித்து கூறுவர்
உலகமாயமாதல் என்ற உன்னத பணிக்கு
தினம் எம்மை தயார் படுத்தும் தேவலோக சிற்பிகள்

நூலகத்தின் சாரத்தை நுட்பமாக எமக்கூட்டி
செய்யும் முறைக்கல்வியை திறம்பட ஊட்டும்
நம்மைத் தேடி வரும் மாணவர்களை தேர்ச்சி ஆக்கி
வேலை உலகிற்கு தயார்ப்படுத்தும் வேதாந்திகள்

இனி விக்னேஸ்வராச் சோலையின்
விதைகளை நாம் பார்ப்போம்
வண்ண வண்ணப்பூக்கள் வாசனைப் பூக்கள்
எண்ணங்கள் பல கொண்டு ஏற்றம் பெற வரும்
இவர்கள் எப்படி வருகிறார் இங்கே

ஏழ்மையும் இரங்கலுமாய் இவர்கள் வாழ்வுநிற்க
வறுமைக் கோட்டிற்குள் வாடி வதங்குகிறவர்கள்
எம் கிராமத்துக் கிளிகள் கீதை சொன்ன நாயகர்கள்
அணைத்துக் கொள்கிறது அன்பு விக்னேஸ்வரா
இந்த.........
விக்னேஸ்வராக் குழந்தைகளின்
காலக்கடப்பை
கட்டைவிரலினால் எட்டி நின்று தட்டுவோம்
எத்தனை கல்விமான்கள்
எத்தனை கல்விமான்கள்
எத்தனை வியாக்கியானங்கள்
எத்தனை விற்பன்னர்கள்
சொல்லும் தரம் அன்று சொல்லும் மொழி எனக்கு


சிந்தனையின் சின்னம் சிவசிதம்பரம் - எம்
கல்வி மாதாவில் களை எடுக்கவந்தவர் இவர்
ஆசிரியத்துவத்தின் கிழக்குகளுக்கு
முகம் கொடுக்கும் புதிய சூரியன்

தகவல் தொழில்நுட்பம் உயிரியல் தொழில் நுட்பம்
தொழில்நுட்பம் கலாச்சார தொழில் நுட்பம்
என்ற தொழில் நுட்பங்களுடாக
ஆசிரியர்களை உரமாக்க – உணர்வோடு
கனவு காண்பவர்

கனவுகள் நனவாக கடுமையாக உழைக்கும்
உரமுடன் உன்னத அறிவும் படைத்தவர்
பாடசாலைப் பக்குவத்தை
பக்குவமாய் உள்வாங்கி
இசுறு என்று எம் பாடசாலை
இனிமையாக எழும்பி நின்று
அயராது உழைக்கும் அசகாய சூரர் இவர்

வாழ்க பாடசாலை எம் பாடசாலை
வளர்க இசுறு விக்னேஸ்வரா

# பாடசாலையில் நடந்த நிகழ்வுகள்










# International Teachers' Day on 05.10.2009



## ...கள் பற்றிய ஒரு க...

★ வேம்படி மகளிர், ஹாட்லிக கல்லூரி இரண்டும் நூறு வீத உயர்கல்வித் தகைமையை ஏற்படுத்திச் சரித்திரம் படைத்துள்ளன.

★ 10 கல்லூரிகள் தவிர்ந்த ஏனைய 35 கல்லூரிகளிலும் முன்னேற்றம் காணப்படுகின்றது.

★ 50 வீதத்துக்கு மேல் சித்தியை ஈட்டிய கல்லூரிகள், சிறப்பாக நகரங்கள் சாராக் கல்லூரிகள் பாராட்டப்பட வேண்டியவை.

★ கன்னாகம் இராமநாதன் கல்லூரி, உடுவில் மகளிர் கல்லூரி சென்.பற்றிக்ஸ் கல்லூரி ஆகியவை பெருஞ்சரிவினைக் கண்டுள்ளன.

★ 25 வீதம் பெறுபேறுகளைத் தானும் பெற முடியாத நிலையில் 2 கல்லூரிகள் காணப்படுகின்றமை கவலை தரும் விடயமாகும்.

போர் முனையிலே செயற்படும் மருதங்கேணிக் கோட்டப் பாடசாலைகளான குடத்தனை G.T.M.S 33%, அம்பன் A.M.T.M.S 33% மருதங்கேணி R.C T.M.S 25 % என்பது இங்கு சுட்டிக் காட்டப்பட வேண்டியது.

★ பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் கல்லூரியும், கரவெட்டி விக்னேஸ்வரா கல்லூரியும் 2004 ஆம் ஆண்டைவிட முறையே 35, 34 வீத பெறுபேற்று உயர்வினைக் காட்டியுள்ளன.

இதனால் 2004 ஆம் ஆண்டில் 19 ஆவது நிலையிலிருந்த மெதடிஸ்த மகளிர் கல்லூரி 6 ஆம் இடத்திற்கும், 28 ஆம் இடத்திலிருந்த கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி 12 ஆம் இடத்தையும் பிடித்துள்ளன. இச்சித்தி வீத உயர்வுகளுக்குக் காரணமான அதிபர்களும், ஆசிரியர்களும் பாராட்டுக்குரியவர்கள்.

**4 ஆண்டுகளில் பெறுபேற்று வீதத்தில் பெரும் பாய்ச்சலை ஏற்படுத்திய கல்லூரிகளின் முதல்வர்கள்**



பருத்தித்துறை மெதடிஸ்த அதிபர்
[illegible]



திரு. [illegible]
கரவெட்டி விக்னேஸ்வரா அதிபர்

# நாம் நடந்து வந்த படிக்கட்டுகள்

எமது கல்லூரிக் கலைவிழா என்று வரும்போதெல்லாம் நாம் நடந்து வந்த, ஏறி வந்த படிகளை எல்லாம் அசை போடுகின்றோம். எமது பள்ளிக்காலத்தில் மறக்க முடியாத நினைவுகளெல்லாம் ஒருமுறை என் மனத்திரையில் வந்து போகும். நான் விக்கினேஸ்வராக் கல்லூரியை விட்டு வெளியேறி அரை நூற்றாண்டு காலம் கடந்து விட்டது. இன்னும் அந்தப் பள்ளிக்கால நினைவுகள் மிகவும் பசுமையாகவும், இளமையோடும் நினைவில் நிறைந்து நிற்கின்றன.

வாழ்வில் எவ்வித பொறுப்புக்களையும் உணராது மனத்தில் எவ்விதமான துயரமான எண்ணங்கள் எதுவுமின்றி சுற்றித்திருந்த காலமது. இன்று அதனை நினைக்கும் போதெல்லாம் அந்தப் பொன்னான நாட்கள் திரும்பி வராதா? என்கின்ற ஏக்கம்தான் மிஞ்சும். ஒவ்வொரு நாளும் பள்ளிக்கூடத்தைச் சுற்றியுள்ள குறுக்குப் பாதையூடாகவும் வீதி வழியாகவும் வயல் வெளி ஊடாகவும் புத்தகங்களைச் சுமந்து கொண்டு விறு விறுவென நடந்து வருவோரும், துவிச்சக்கர வண்டியில் வரும் மாணவர்கள் ஆணும் பெண்ணுமாக பள்ளி வந்து சேரும் அந்த நாட்கள், சத்தம் நிறைந்த வகுப்பறைகள், அந்தப் பழைய கட்டடங்கள், வாங்கில் மேசைகள், கீழ் வகுப்பு, மேல் வகுப்பு மாணவர்கள், விஞ்ஞானகூட சுவாரசியமான நிகழ்வுகள், விவாத மேடைகள், பரீட்சைக் காலம், விளையாட்டுப் போட்டிகள், பலதரப்பட்ட ஆசிரியர்கள் அவர்களை நினைவில் நிறுத்தும் நிகழ்வுகள் என இக்கல்லூரி வாழ்க்கைக்காலம் எமது வாழ்வில் சில வருடங்கள் நீடித்திருந்தாலும் அவை மறக்க முடியாத நாட்கள், மிக மிக மகிழ்ச்சியான காலம்.

இன்று அந்த வாழ்க்கை எமது உற்றாருக்கும், உறவினருக்கும் கிடைக்கவில்லை. இன்று எமது நாட்டு அரசியல், சமூக, பொருளாதாரச் சூழல் முற்றிலும் மாறுபட்டு இருக்கிறது. எமது காலச் சுதந்திரம் அவர்களுக்கு அங்கில்லை. ஒவ்வொரு நாட்களும் என்ன நடக்குமோ, எப்படி நடக்குமோ என்ற பயத்துடன் வாழ வேண்டிய காலம். இன்னிலையில் அவர்கள் எப்படிக் கல்வியைத் தொடர முடியும். வெளி உலகம் எவ்வளவு முன்னேறிக் கொண்டிருக்கிறது. புலம் பெயர்ந்து வாழும் நமது பிள்ளைகள் அந்த நிலையை எண்ணிப் பார்க்கவும் முடியாது. இந்தச் சூழலிலும் எமது உறவுகள் கல்வியைத் தொடர்கிறார்கள். சென்ற வருடம் எமது கல்லூரி மாணவர்கள் பலர் பல்கலைக்கழகத்திற்கு அனுமதி பெற்றிருக்கிறார்கள் என்றால் அது எமக்குப் பெருமையளிக்கிறது. இதற்கு புலம் பெயர்ந்து பல நாடுகளிலும் வாழும் பலருடைய உதவியும் ஒரு காரணம் என்பதையும் மறக்கமுடியாது.

நாம் நமது உற்றார், உறவினருக்கு செய்யும் உதவியுடன் ஒரு பகுதியை பள்ளிக்கூடம் போன்ற பொது நிலையங்களுக்கு உதவினால் அது உற்றார், உறவினர் ஒவ்வொருவருக்கும் உதவியாக அமையும்.

"அன்ன சத்திரம் ஆயிரம் அமைக்கினும் - ஆங்கோர்
ஏழைக்கு எழுத்தறிவித்தவன் இறைவனாவான்."

இந்தப் பரந்த நோக்கோடு ஒரு பொதுவுடமைக் கோட்பாட்டோடு உயர் நோக்குடன் " எமது இராசேஸ்வரி ரீச்சர் முயற்சி செய்து கொண்டிருக்கிறார். திருமதி.இராசேஸ்வரி ஈஸ்வரஞானம் எமது கல்லூரியின் வளர்ச்சிக்காக எமது புலம் பெயர்ந்த உறவுகளிடமிருந்து இயலுமான உதவியைப் பெற்று பாடசாலைகளுக்கு பண உதவி செய்கின்றார். இந்தப் பொதுச் சேவையைச் செய்ய நம்மில் பலரால் முடிவதில்லை. அது மிகவும் கஸ்டமான சேவை என்பதை நான் நன்கு அறிவேன். எதையும் தாங்கும் இதயத்தோடு யார், எது சொன்னாலும் மனம் கோணாது தன் வீட்டுப் பொறுப்புக்களுடன் இச்சேவை செய்வதற்கு நமது சமூகம் அவருக்கு என்றும் கடமைப்பட்டது.

" நிதி மிகுந்தவர் பொற்குவை தாரீர்
நிதி குறைந்தவர் காசுகள் அருளீர்
அதுவுமற்றவர் வாய்ச் சொல்லருளீர்"

எம்முடைய புலம் பெயர் வாழும் உறவுகளுக்கும் பல்வேறுபட்ட பிரச்சனைகள் உண்டு. மறக்கமுடியாது. எனினும் இதனை "பாலுக்குச் சக்கரை இல்லை" என்பதாகத்தான் கொள்ள வேண்டும். நமது நாட்டில் வாழும் உறவுகளுக்கு "கஞ்சிக்கு உப்பில்லை" என்று ஏங்கியிருப்போருக்கும் எமது அரசியல் சூறாவளியினால் சிக்கிச் சீரழிந்து கொண்டிருக்கும் உறவுகளுக்கு உதவுவதில் இச்சேவை மிக முக்கியமானது. இதுவே அறிவுடைச் சமுதாயத்தை உருவாக்க உதவும்.

"அன்ன சத்திரம் ஆயிரம் அமைக்கினும் - ஆங்கோர்
ஏழைக்கு எழுத்தறிவித்தவன் இறைவனாகும்."

**திரு.செ.வீரவாகு**
சட்ட ஆலோசகர்

# எல்லோரும் கூடி வாழ்வோம்

"ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு-நம்மில் ஒற்றுமை நீங்கில் அனைவருக்கும் தாழ்வு"

பள்ளி வகுப்புமுதல் படுக்கைக்கு போகும் வரை இடித்து இடித்துச் சொன்னர்கள். எங்கள் ஆன்மாவை ஆணவம் ஆட்டிப்படைக்கின்றது. மனிதன் மும்மலங்களிலும் மூழ்கி மகிழ்கிறான் கிறிஸ்த்தவனாய் வாழ்கின்றான்; இந்துவாய்வாழ்கின்றான் முஸ்லிமாய் வாழ்கின்றான்- ஏன் பிரதேச வாதியாகவும் வாழ்கின்றான் - ஆனால் மனிதனாய் வாழமட்டும் மறந்துவிட்டான்- பேசும் மொழியில் ஒன்றுபட்டுத் தமிழனாய் வாழமறந்துவிட்டான்.

வாழ்க்கை என்பது ஒருமுறைதானே - இந்த வாழ்தலுக்காய்த்தானே இத்தனை போராட்டங்கள் இதுவரை என்னசெய்தோம் நாங்கள் இன்னும் என்ன செய்கின்றோம் இன்னும் என்ன செய்யப்போகிறோம். நாங்கள் பொய்யினைப் பெருக்கி பொழுதினைச் சுருக்கிறோம் தற்புகழ்ச்சி தேடினோம் தன்மதி மறந்தோம்.

அன்பே சிவம் என்ற உண்மையை மறந்தோம் அறத்தினை மறந்தோம் அகங்காரம் கொண்டோம் புரிதலை மறந்தோம் இவ்வுலகவாழ்வை நிஜமென எண்ணினோர் அறிவினை இழந்தோம் அவசரப்பட்டோம், ஆத்திரம் கொண்டோம் - ஆதலால் - நாம் என்பதை மறந்தோம் நான் என நினைந்து உறவாய்க் கூடி வாழ மறந்தோம். சோத்துக்காய்ச் சண்டை வெற்று உடலுக்காய்ச் சண்டை- வேறு காரணம் தேடியும் சண்டை வரும்போது எதைக் கொண்டுவந்தோம். நாம் - போகும்போது எதைக் கொண்டு போவோம் - இதுதானே வாழ்வின் தத்துவம். ஆயினும் பகுத்தறிவு மனிதரிடம்தான் வேற்றுமை கண்டோம்.

காக்கைகள் கூட ஒன்றாய்க் கூடி உண்ணும் - காட்டு விலங்குகள் கூட ஒன்றாய்க் கூடிவாழும் ஆனாலும் நாங்கள் மட்டும். ஏன் மனிதனாய்க்கூடிவாழ மறந்தோம் அன்பால் கூடி இணைய மறந்தோம் அறிவாய் வளர மறந்தோம்.வாழ்க்கை என்பது நிலையற்றது என்கிறார் - மண்ணில் நல்லவண்ணம் வாழலாம் என்கிறார்- இதற்கான உண்மையை கண்டவர். "விண்டிலர் விண்டவர் கண்டிலர் எதிர்காலத்தை நினைத்து நிகழ்காலத்தை துறக்கிறோம்" கற்பனைகளிலும் கனவுகளிலும் காலத்தை ஓட்டுகிறோம். கற்பனையில் கைகள் சேரலாம் கற்பனையில் வாழ்க்கை இல்லை இனிமேலாவது இன்பத்தைத் துறந்து துன்பத்தை தேடுவதை விடுத்து விட்டுக்கொடுப்புக்களுடனும் புரிந்துணர்வுடனும் ஆன்றோர் காட்டிய பாதையை மனத்தில் இருத்தி ஒன்றாய் வாழ்வோம் ஒற்றுமையாய் வாழ்வோம். இவை யாருக்குமான புத்திமதியல்ல- என்மனத்தின் தேடல்கள்- என்மனத்திலுறைந்த இரத்தவடுக்கள், காயங்கள், என்மனத்தின் ஏக்கங்கள் தவிப்புக்கள் குமுறல்கள் உங்கள் முன் வார்த்தைகளாக வரிகளாக கண்ணீர்த் துளிகளாக. வாழ்க மனிதன் வளர்க மனிதநேயம்

அன்பே இன்பஊற்று

நன்றி வணக்கம்

**திருமதி.இராசேஸ்வரி ஈஸ்வரஞானம்**




WATCH ME


Tel : 208 552 9578
Best Foods
414-416 High Street North East Ham London E12
259 - 261, London Road West Croydon
Surrey CRO 2RL
Tel : 020 8684 6269 Fax : 684 4677
காய்கறி
இறக்குமதியில்
மாபெரும்
சாதனை
லண்டனில் மலிந்த விலையில் காய்கறிகள்
பரபரப்பான
விற்பனையில்
க்ரியாவின்
தமிழ் அகராதி


Fully Licenced
&
Air conditioned
SPICELAND
FOR THE ASIAN TASTE OF
SPICE CURRY
Sri Lankan and South Indian Restaurant and Takeaway
212, LONDON ROAD, CROYDON, SURREY, CR0 2TE
பசித்திடும் போதே புசித்திட இன்றே நாடுங்கள்
For your weddings, Birthdays or any other ceremonies, you can call us to enjoy your parties with varieties of food cooked traditionally.
Specialists for the Sri Lankan style food and spicy curries.
100 பேருக்கு மேல் மரக்கறி சாப்பாடு ஓடர் செய்தால் ஒரு சாப்பாடு 2 பவுண் மட்டுமே
100 இடியப்பம் சம்பல் சொதியுடன் 12 பவுண் மட்டுமே
For all your inquiries:
020 8667 1700 / 07984 038 757


VAANI FOODS
லண்டனில் முதல்தர காய்கறி இறக்குமதி
மொத்த விற்பனையாளர்கள்
Vaani Foods
MILD
CURRY POWDER
CURRY POWDER
CURRY POWDER
தயாரிப்பாளரிடம் இருந்து நேரடியாக
வாடிக்கையாளருக்கு
தொலைபேசி இலக்கம்
0208 668 7648

இக்கட்டுரையில் 1ஏபி பாடசாலைகள் 46 இனதும் பெறுபேறுகள் மட்டும் நோக்கப்படுகின்றன. இவற்றில் 2004 ஆம் ஆண்டுக்குரிய பெறுபேறுகளுடன் ஒப்பிட்டுக் இச்சித்தி வீதம் 30.8 ஆகும்.

1ஏபி பாடசாலைகளது பெறுபேறுகள் இங்கு இறங்கு வரிசையில் தரப்படுகின்றது.

அவதானிப்பு

| இல | பாடசாலை | தோற்றியோர் | சித்தி | 2007 சித்தி வீதம் | 2004 சித்தி வீதம் | வேறு |
|---|---|---|---|---|---|---|
| 01 | வேம்படி மகளிர் கல்லூரி | 219 | 219 | 100 | 98 | +2 |
| 02 | ஹாட்லிக் கல்லூரி | 120 | 120 | 100 | 88 | +12 |
| 03 | யாழ்.இந்துக் கல்லூரி | 210 | 209 | 99 | 98 | +1 |
| 04 | தெல்லிப்பளை யூனியன் கல்லூரி | 90 | 86 | 95 | 84 | +11 |
| 05 | சுண்டிக்குளி மகளிர் கல்லூரி | 108 | 103 | 95 | 79 | +16 |
| 06 | மெதடிஸ்த மகளிர் கல்லூரி | 110 | 102 | 92 | 54 | +38 |
| 07 | இந்து மகளிர் கல்லூரி | 227 | 209 | 92 | 70 | +22 |
| 08 | சென்.ஜோன்ஸ் கல்லூரி | 124 | 108 | 87 | 81 | +6 |
| 09 | கொக்குவில் இந்துக் கல்லூரி | 204 | 167 | 81 | 76 | +5 |
| 10 | சாவகச்சேரி இந்துக் கல்லூரி | 233 | 189 | 81 | 67 | +14 |
| 11 | சென்.பற்றிக்ஸ் கல்லூரி | 144 | 107 | 74 | 98 | -24 |
| 12 | காரைநகர் விக்னேஸ்வரா | 77 | 56 | 72 | 38 | +34 |
| 13 | மகாஜனக் கல்லூரி | 95 | 68 | 71 | 71 | 0 |
| 14 | யாழ்.மத்திய கல்லூரி | 192 | 134 | 69 | 54 | +15 |
| 15 | உடுப்பிட்டி மகளிர் | 62 | 41 | 66 | 49 | +17 |
| 16 | வல்வை மகளிர் கல்லூரி | 28 | 18 | 64 | 51 | +13 |
| 17 | யாழ்ற்ரன் கல்லூரி | 37 | 23 | 62 | 33 | +29 |
| 18 | மானிப்பாய் மகளிர் கல்லூரி | 71 | 44 | 62 | 56 | +6 |
| 19 | யாழ்ப்பாணக் கல்லூரி | 116 | 71 | 61 | 63 | -2 |
| 20 | திருக்குடும்ப கன்னியர் மடம் ம.வி. | 109 | 67 | 61 | 62 | -1 |
| 21 | உடுவில் மகளிர் கல்லூரி | 121 | 72 | 59 | 83 | -24 |
| 22 | புனித ஹென்றியரசர் கல்லூரி | 50 | 29 | 58 | 38 | +20 |
| 23 | வட இந்து மகளிர் கல்லூரி | 116 | 68 | 58 | 44 | +14 |
| 24 | வயாவிளான் ம.ம.வி | 83 | 47 | 56 | 30 | +26 |
| 25 | கலாநிதி தியாகராஜா ம.ம.வி. | 54 | 30 | 55 | 57 | -2 |
| 26 | ஸ்கந்தவரோதயக் கல்லூரி | 122 | 65 | 53 | 48 | +5 |
| 27 | வேலணை மத்தி | 56 | 30 | 53 | 28 | +25 |
| 28 | மானிப்பாய் இந்துக் கல்லூரி | 74 | 39 | 52 | 36 | +16 |
| 29 | வட்டு. இந்துக் கல்லூரி | 124 | 62 | 50 | 31 | +19 |
| 30 | சென்.அன்ரனிஸ் கல்லூரி | 34 | 17 | 50 | 19 | +31 |
| 31 | நெல்லியடி ம.ம.வி | 90 | 43 | 47 | 50 | -3 |
| 32 | றிபேக் கல்லூரி | 63 | 30 | 47 | 22 | +25 |
| 33 | இளவாலை கன்னியர் மட மகாவித்தி | 94 | 44 | 46 | 40 | +6 |
| 34 | உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் | 89 | 41 | 46 | 32 | +14 |
| 35 | இராமநாதன் கல்லூரி | 69 | 31 | 44 | 68 | -24 |
| 36 | வைத்தீஸ்வராக் கல்லூரி | 71 | 30 | 42 | 33 | +9 |
| 37 | சிதம்பராக் கல்லூரி | 26 | 11 | 42 | 30 | +12 |
| 38 | இடைக்காடு ம.ம.வி | 31 | 12 | 38 | 50 | -12 |
| 39 | கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி | 98 | 35 | 35 | 30 | +5 |
| 40 | கனகரத்தினம் ம.ம.வி | 71 | 25 | 35 | 24 | +11 |
| 41 | சோமஸ்கந்தக் கல்லூரி | 112 | 37 | 33 | 26 | +7 |
| 42 | சாவகச்சேரி மகளிர் கல்லூரி | 55 | 18 | 32 | 52 | -20 |
| 43 | விக்ரோறியாக் கல்லூரி | 121 | 36 | 29 | 29 | 0 |
| 44 | பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி | 55 | 14 | 25 | 22 | +3 |
| 45 | வேலாயுதம் ம.வி | 33 | 07 | 21 | 18 | +3 |
| 46 | உரும்பிராய் இந்துக் கல்லூரி | 69 | 05 | 07 | 10 | -3 |

VSN HOME CATERING SERVICES



# *Fully vegetarian*

We are specialist in srilankan and south Indian foods. Also we do birthday parties, wedding ceremonies,Puberty ceremonies with special package.

100 string hoopers with sothi and sambal £15.00
We also make dosai, Idly, Milk hopper and Plain hopper
Rice with 5 curries and vadai payasam papadom and butter chilli….
Over 100 portion £3.00 each

**Please make the order early as possible to avoid disappointment.**

**Our reputation is your recommendation**

**3 Ockley Road , Croydon CR0 3 DR**
**Tel: 0208 6659256**
**Mobile: 07802 746779**
**Mrs.Baby Vanaja Shabanathan**



# CELINE Food & Wine

**OFF LICENCE & GROCERIES**
**6 The Parade**
**Mitcham Road**
**Croydon CR0 3HL**




***We sell Srilankan, Indian, Polish and Caribbean foods and beers, wines as a special price.***

**Opening Times:**
**Mon - Thu 8.00a.m to 10.30p.m**
**Fri & Sat 8.00a.m to 11.00p.m**
**Sun 9.00a.m to 10.30p.m**

**Tel: 0208 683 4422**

**Mail: Jeyam_3@hotmail.com**


Western
jewellers
Jewellers & Gem Merchants
230 Upper Tooting Road
London SW17 7EW
Telephone:
020 8767 3445
Opening Hours
Monday to Saturday
10.00am - 6.30pm
Sunday
11.00am - 5.30pm
SILK
EMPORIUM
Upper Tooting Road
London SW17 7EN
Tel: 020 8672 1900
Season's best is "Summer"
Saree's Best is "Silk Emporium Sarees"
Western
Jewellers & Textiles
5, Plaza Parade, 29 - 33 Ealing Road,
Wembley, Middlesex HA0 4YA
Tel: 020 8903 0909



புதிய சேவை Lewisham பகுதியில்
NET PRINTERS
தமிழ் அச்சகம்
உங்களுக்கு தேவையான
அழைப்பிதழ்கள்,
விளம்பரங்கள் அனைத்து
அச்சகவேலைகளும் மற்றும்
Photo copy, Fax,
Scanning, Binding
சேவையும் குறைந்த
கட்டணத்தில்
வழங்குகின்றோம்
MARISCHAL ROAD
NET PRINTERS
LEE HIGH ROAD
LEWISHAM
சிவன்கோவில்
CLOCK TOWER
9 Marischal Road,
Lewisham
London SE13 5LE
T.P: 020 8265 0219,
07804 759 760
உங்கள் திருப்தியே எங்கள் திருப்தி


Portland
UNITED KINGDOM LIMITED
ESTATE AGENTS
Mortgage
Remortgage
BUSINESS LOANS FOR
Shops
Petrol Stations & Hotels
Sales - Lettings - Mortgages
Call Pon Siva
9 St. James Road,
Croydon
Surrey CR0 2SB
Tel : 020 8683 1313
Fax : 020 8684 0444

# A Luxury Lifestyle with a Panoramic View

**Fully Furnished**

**Service Apartment**

**in Kandy**

**20% Rental Guarantee**

**for 3 years**

**Ready for Occupation**

**in Dec 2010**




**Hotel**




**Restaurant**



22/5A, Off De Saram Road, Mount Lavinia.

**Apartments For Sale**




W.A. Silva Mw, Col-06




Lower Bagatalle Road.




Bagatalle Road, Col-03




**Seagull Global Holdings Pvt Ltd,**
3A, 42nd Lane, Colombo-06, Sri Lanka.
Tel: +94 112 363 834 Fax: +94 112 363 863

**Hotlines:**
+94 777 317075, +94 717 317075.
Email: vakee123@gmail.com.

www.seagullglobal.com


NET PRINTERS - ஓாசியம். 020 8265 0219